620

"CHANDRODAYAM" 6 20 1-9-1936

சந்திரோதயம்

27 JAN 1937
MADRAS

விலை: உள்நாடு 2 அணா, இலங்கை 2½ அணா, வெளி நாடு 4 அணா.

தி ஸ்டார் ஆப் இந்தியா
இண்டஸ்டிரியல் & ஜெனரல் அஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்:—நெ 8, செம்புதாஸ் தெருவு, மதருஸ்

நம் இராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டு மிகவும் திரமையுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கம்பெனியின் இன்சூரன்ஸ் திட்டங்கள் மிக விசேஷமான நன்மைகளுடன் கூடியவை. எல்லாவிதமான சௌகரியங்களும் அளிக்கப்பபப்படுகின்றன.

கம்பெனியின் அபிவிருத்தி.

அளிக்கப்பட்ட பாலிஸிகளின் தொகை	23,00,000
ஐவேஜிகள் சுமார்	2,00,000
கவர்ன்மெண்டு செக்யூரிடிகள்	1,00,000
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை (இண்டஸ்டிரியல் இன்ஷ்யூரன்ஸ திட்டங்கள்)	3,00,000

இந்த இராஜதானியில் ஒவ்வொரு முக்கிய இடத்திலும் ஏஜண்டுகள் சம்பளத்திலும், கமிஷனிலும் தேவை. செல்வாக்கும், சாமர்த்தியமும் உள்ளவர்கள், மற்ற விவரங்களுக்கு தலைமை ஆபீஸுக்காவது, அல்லது கீழ் கண்ட ஆர்கனைஸர்களுடைய ஆபீஸுகளுககாவது எழுதவும்.

எஸ். பாலசுப்ரமணிய ஐயர்,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
வைதீஸ்வரன் கோவில், தஞ்சை ஜில்லா

வி சங்கரசுப்பு,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

எல். நரசிம்ஹம்
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர், 80, மேல ஆவணி வீதி, மதுரை.

‘சந்திரோதயம்’

(மாத மிருமுறைப் பத்திரிகை)

“கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப்
பிரிந்துலந்தவர்க்
குயிர்சுடு விடமுமாயுடன் புலந்தவர்க்
குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா
மதனன் வேண்டவே.”

—கம்பர்

ஆசிரியர் :—என். விஜயகுமார்.

தொகுதி	1936ஶு	பகுதி
1	செப்டம்பர்மீ 1௳	4

எடிஸன் மலர்

சாகா உயிர்பெற்ற அறிஞர்களுள் தாமஸ் ஆல்வா எடிஸனும் ஒருவர். கிராமபோனிலிருந்து, சினிமா வரையிலும், சுமார் 172 விஷயங்களுக்கு கண்டு பிடித்துள்ளார். இத்தகைய பெரிய விஞ்ஞானியினது திருநாளைக் கொண்டாடும் நோக்கத்தைக் கொண்டே நாம் ‘எடிஸன் மலரை’ பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளோம்.

சென்ற இரண்டு மூன்று ஆண்டுகள், பத்திரிகை மயமாய்த் திகழ்ந்தன. ஆனால் இந்த ஆண்டோ மலர் மயமாய் திகழ்கிறது. மூலைக்கொரு மலர்தான் தோன்றுகின்றது. ஆனால் ஜனங்கள் திருப்தியடைவதாகக் காணோம். காரணம் இங்கு சொல்வதும் அவசியமில்லை. சொன்னாலும் சகோதரப் பத்திரிகாசிரியர்கள் நம்மீது சீறிவிழுவார்கள்.

தமிழ் நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளுக்கும் நமது பத்திரிகைக்கும் இருக்கும் வித்தியாசத்தை வாசகர்கள் நன்கு உணர்வார்கள்.

‘நமது பத்திரிகையால் இன்றைய வரையில் ஒரு லாபமும் கிடையாது. நஷ்டம் தான் அதிகமாகிறது. ஆனால் எதிர்காலத்தில் நமது பத்திரிகை அசைக்க முடியாத செல்வாக்கைப் பெற்றுவிடும் என்று நமக்கு நிச்சயமாகத்

தெரியுமாதலின் அந்த நம்பிக்கைக்கொண்டு, அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. 'பத்திரிகை' நன்றாக யிருக்கவேண்டும்—காசு கொடுத்து வாங்கும் வாசகர்களை ஏமாற்றி வயிறெரிய வைக்கக்கூடாது" கொள்கை மீதே நமது பத்திரிகை நடக்கிறது.

ஆக, நமது எடிஸன் மலரும், தமிழ் நாட்டிலேயே இது வரையிலும் வெளிவராத தினுசில் பிரசுரமாகிறது. ஆர்ட் காகிதங்களில் அச்சிடப்பட்ட படங்களும் இன்னும் சுமார் 200 படங்களும் மலரில் பிரசுர மாகின்றன. கருத்தைக் கவரும் கட்டுரைகளுக்கும் பஞ்சம் கிடையாது. கல்கத்தாவில் பிரசித்தி பெற்ற நாட்டியக்காரியான ஸ்ரீமதி. கமலேஷ்குமாரி, ஸ்ரீமதி. மாதுரி, முதலியவர்கள் எழுதிய கட்டுரைகளும் பிரசுரமாகின்றன. ஹாலிவுட்டிலிருந்து ரோனால்ட் கோல்மனால் (Ronald Colman) பிரத்தியேகமாக அனுப்பப்பட்ட அவரது படமும் பிரசுரமாகிறது.

இவைகளை யெல்லாம் கவனிக்கையில் நமது மலருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை மிகவும் குறைவு, அதாவது நான்கு அணாக்கள்.

வாசகர்களனைவரும் நமது மலரை ஆதரித்தால் தான் நாம் பெரிய நஷ்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். ஏஜண்டு நண்பர்களும் இதற்கு வேண்டிய உதவி செய்வார்களென்றே நாங்கள் நம்புகிறோம்.

மேலும் இந்த மலரில் பாலபாரதி ச. து. சு. யோகியின் கவிதைகளும் 'தாவி' 'தாண்டவன்' 'நளினி மோஹன்' ஸ்ரீமதி. கமலவேணி முதலியோரின் கட்டுரைகளும், 'இளங்கோவன்' எழுதிய கதை ஒன்றும் இன்னும் பல அறிஞர்களின் எழுத்துக்களும் வெளியாகின்றன.

தமிழ் நாட்டில் இது வரையில், இவ்வளவு குறைந்த விலையில், இதுபோன்ற 'மலர்' வெளிவந்ததில்லை. என்று மட்டும் சொன்னால் போதுமானது.

சந்திரமோகனாவில் ஒரு காட்சி.

ஓர் அரிய சந்தர்ப்பம்!

கவனியுங்கள்!! **கவனியுங்கள்!!!**

1500 பக்கங்கள் கொண்ட அரிய பெரிய

வைத்திய சாஸ்திரம்

சிகிச்சா சாரம்

உங்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கிறது.

தமிழ்ப் பேசும் இரண்டு கோடிமக்களின் நலன் கருதி 7 வருடம் அரும்பிரயாசையின் பேரில் எழுதிமுடித்து தற்சமயம் அச்சிடப்படுகிறது.

விஷய அட்டவணைமட்டும் 60 பக்கங்களுக் கதிகமுள்ளது.

சம்பூரண வைத்திய அறிவைப்புகட்டும் நூல் இது ஒன்றே. இதுவரை வேறெந்த பாஷையிலும், வெளிவராத சிறந்த வைத்திய சாஸ்திரம். சுதேச மேல்நாட்டு வைத்தியங்களை சாங்கோ பாங்கமாய் கொண்டுள்ளது.

ஒவ்வொருவரும் இதைக் குறைந்த விலையில் அடைய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது:

☞ 15-9-36-க்குள் முன் பணமாக ரூ. 3-8-0 அனுப்பி தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்வோருக்கு புஸ்தகம் பயிண்டாகி முடிந்தவுடன் யாதொரு செலவுமின்றி அனுப்பிவைக்கப்படும்.

இதற்குப் பின் புத்தகம் ஒன்று ரூ. 5-0-0 வீதமே விற்கப்படும். தபாற் செலவும் ரூ. 1-4-0 ஆகும்.

எல்லா விவரங்களுக்கும்:

டாக்டர் எஸ் ஏ. சின்னப்பர்

"ஆவே மரியர் காட்டேஜ்",

எட்டயாபுரம்.

திருநெல்வேலி ஜில்லா.

சலூன் வாலா *

"இளங்கோவன்"

இது ஒரு நாவிதரின் கதை.

இந்த நாவிதரின் பெயர் கந்தய்யா. வயதோ எழுபதுக்குமேல் ஓடிவிட்டது. தனது வாழ்க்கையில் உயிருள்ள எதையும் இவர் காம தொட்டு ஹிம்ஸித்ததில்லை.

மவுண்ட் ரோட்டில் நீல் சிலையருகிலிருந்த சலூன் ஒன்றில் தான் இவர் வேலை செய்து வந்தார். கிழவனார் அவ்வளவு உயரமல்ல! மயிரோ வெண்பனி உருவத்தில் விளங்கியது.

அங்கிருந்த ஐந்து நாற்காலிகளில் இரண்டாவது நாற்காலிதான் கந்தய்யாவினுடையது. முதல் நாற்காலியில் சலூன் எஜமானன் வேலை செய்து வந்தான். க்ஷவரம் செய்து கொள்ள ஒருவன் வந்துவிட்டால் போதும்! அங்கிருக்கும் ஐந்து பேர்களும் ஏக காலத்தில் அவனைக் கவனிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஒருவன் 'வாருங்கோ என்று வயணமாய் கைகாட்டி அழைப்பான். மற்றொருவன் தனது புன்னகையினால் வரவேற்பான். இன்னொருவன் கண் வேலையினாலேயே வந்த ஆசாமியின் கருத்தைக் கவர்வான். எல்லார் உதடுகளிலும் சிரிப்பும், கண்களில் கொஞ்சல் பார்வையும் தாண்டவமாடும்:

கந்தய்யாவைப் போல் எஜமான் விஸ்வாஸம் பொருந்திய வேறு ஆள் அந்த சலூனில் கிடையாது. தம்மாலான மட்டும் கிழவர் சலூனுக்கு வருகிறவர்களை வரவேற்பார். ஆனால் அதனால் அவருக்கு ஒரு வாடிக்கைகூட பட்டது கிடையாது. அவர் கிழவனாராக இருந்தது இதற்குக் காரணமாக இருக்கலாம்; அல்லது ஒரு வேளை 'கிழவன் நன்றாக க்ஷவரம் செய்ய மாட்டான்' என்று அவர்கள் நினைத்திருக்கலாம். என எப்படியிருந்தாலும் அவர்கள் வயோதிகரை கவனிக்காது மற்ற நான்கு பேர்களிடமே க்ஷவரம் செய்து கொண்டனர்.

எஜமானனான சங்கரலிங்கம் கிழவனாருக்கு எப்போதோ 'சீட்டு' கொடுத்து விட்டிருப்பான். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அவனுக்கு கந்தய்யாவிடம் அளவற்ற ஆசை—இருபது வருஷங்களுக்கு மேலாக பாரிசு வாய்வாக அவஸ்தைப் பட்டுவரும் ஒரு மனைவியுடன் கந்தய்யா எவ்வளவு காதல் கொண்டிருக்கிறானென்பதையும் அறிவான். தனது சொற்ப சம்பளத்தில் ஒவ்வொரு தம்படியும் தனது மனைவியைக் காப்பாற்றவே கிழவர் செலவழித்து வருகிறார் என்பதும் சங்கரலிங்கத்திற்குத் தெரிந்த விஷயம்.

அதுவும் தவிர, சங்கரலிங்கத்திற்கு மனச்சாட்சியும் இருந்தது. கந்தய்பாவை வேலையிலிருந்து நீக்கிவிட்டால், கிழவனாருக்கு வேறு வேலை எங்கும் கிடைக்கமுடியாது. இப்படியே இருப்பது நல்லது. கந்தய்பா ஆயுள் வரையில் இங்கேயே வேலைபார்த்து வரலாம்.

இப்படியாக வருஷங்கள் சென்றன. பல வருஷங்கள்--நெடுங்கனவைப் போல்—தோன்றி மறைந்தன.

சென்ற மாதத்தில் ஒரு நாள் கடையை மூடிக்கொண்டு போகும் வரையில் இருக்கும்படி கந்தய்யாவிடம் சங்கரலிங்கம் சொன்னான். கிழவனாருக்கோ (இப்போது வயது எண்பத்தொன்று) ஆச்சர்யமும், திகைப்பும், கவலையும் ஏற்பட்டுவிட்டன. மற்றவர்கள் போகும் வரையில் கந்தய்யா காத்துக்கொண்டிருந்தார்.

"தாதா! கடையை விற்றுவிட்டேன். நானும் குடும்பத்துடன் சிங்கப்பூருக்குப் போகிறேன். "ஆனால் உன்னைப்பற்றி தான் கவலையாயிருக்கிறது. இந்தக் கடையை வாங்கின மனிதன் நல்லவன். ஆனால் தொழிலில் இரும்பு மனசுடையவன் தாதா? இதனாலேயே தாதா! நான் கவலைபடுகிறேன்" என்றான் எஜமானன் சங்கரலிங்கம்.

"ஆனால் நீ கவலைப்பட வேண்டியதில்லை. ரத்தினப்பா நாளைக்கு இங்கு வரும்போது அவரைக் கவர்ச்சி செய்யும் முறையில் நீ நடந்து கொள்ள வேண்டும். உன்னாலானமட்டும் புன்னகைசெய். அப்படி ஒன்றும் அதிக வயதாகி விட்டதாக நீ அவரிடம் காட்டிக்கொள்ளக்கூடாது. கடையில் நீ தான் கைதேர்ந்த வேலைக்காரன் என்றும் நான் அவரிடம் ஏற்கனவே சொல்லி விட்டிருக்கிறேன். தெரிகிறதா?......"

கிழவனார் தலையாட்டினார். தமது நன்றியை புன்னகையினால் தெரிவித்துக்கொண்டார். ஆனால் என்ன நேரப் போகிறது என்பது அவருக்கு தெரி

* இந்தக் கதையில் வரும் பெயர்களெல்லாம் வெறும கற்பனையே ஆகும்.

யும்........

வீட்டில் இதைப்பற்றி அவர் ஒன்றும் பிரஸ்தாபிக்க வில்லை. கந்தைப் பாயின்மீது படுத்துக்கொண்டிருந்த கிழவியை முத்தமிட்டார் கிழவனர். யௌவனத்தில் அவளிடமிருந்த அழகை கந்தய்யா வர்ணிப்பதில் கிழவிக்கு இன்பமதிகம். அதை வழக்கம் போலச் செய்தார். அவர் ஏதோ 'கொள்ளைப்பசி' யுடையவரைப் போல வெளிக்குக் காணப்பட்டாரே ஒழிய, கால் கலயஞ் சோற்றைக்கூட அவரால் அன்று சாப்பிட முடியவில்லை.

காலையில் ரத்தினப்பா — புது எஜமான் — ஸலூன் ஆட்களைக் பார்வையிடவேண்டி கடைக்கு வந்தார். நல்ல கம்பீரத்தோற்றமும், முறுக்கு மீசையும், அவர் தலையிலிருந்த முண்டாசும் கந்தய்யாவின் உள்ளத்தைக் கலக்கின. வெளி நபர்கள் ஒருவருமில்லாதபோது ரத்தினப்பா தனது ஆட்களிடம் பேசினன்.

"இந்தக் கடையை 'அப்-டு-டேட்' டாக்க வேண்டும். இந்த மாதிரி பழங்கந்தல் கடையாக இருந்தால் எனக்கு கராக்கி போய்விடும். சனிக்கிழமை சங்கரலிங்கம் உங்களுக்கு சம்பளம் கொடுப்பார். அதிலிருந்து உங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு வேலையில்லை. பின்னர் நான் உங்களுக்கு சொல்லியனுப்புகிறேன். அப்போது வேலைக்குத் திரும்புங்கள்" கந்தய்யாவின் ஹிருதயம் வீழ்ந்து விட்டது. இரண்டு வாரங்கள், சம்பளம் கிடையாது. அதற்கப்புறம்? அப்புறம் என்ன?

இரண்டு வாரங்களும் கழிந்தன. ஆனல் கந்தய்யாவிடம் எந்த ஆளும் வரவில்லை. ஆனபோதிலும் சற்று மனதை திடம் பண்ணிக்கொண்டு அவர் கடைக்குப் புறப்பட்டு விட்டார். ரத்தினப்பா அங்கிருந்தான். சலூன் சட்டையை கிழவர் மாட்டிக்கொண்டபோது ரத்தினப்பாவின் முகம் மாறுபட்டது. மத்தியான முழுவதும் ஒரு ஆசாமிகூட கிழவரிடம் க்ஷவரம் செய்து கொள்ளாது மற்றவர்களிடமே க்ஷவரம் செய்து சென்றதைகூட கண்டான் புது எஜமானன். அப்போது அவன் கந்தய்யாவை அழைத்தான்.

"கந்தய்யா! இங்கு சனிக்கிழமை வரையில்தான் நீ வேலை செய்யலாம். அது வரையிலும் நான் உன்னை இங்கு வேலைக்கு வைத்திருக்கிறேன். அதற்குள் புது வேலை சம்பாதித்துக் கொள்ள உனக்கு நேரமிருக்கிறது. அதுவுந் தவிர இங்கு காலைப் பையன் களையே வேலைக்கு அமர்த்தப் போகிறேன்"

கந்தய்யா திகைப்பினல் சுற்று முற்றும் பார்த்தான் எல்லாம் மாறிவிட்டிருந்தன. விசித்திரமான படங்கள் சுவரில் தொங்கின. அங்கங்கே சிறு சிறு குழாய்கள் காணப்பட்டன. பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகள். ஆட்களில் சிலர் புதிதாக இருந்தனர். அந்த ஆட்களில் சிலர் 'சிகரெட்' அடித்துக் கொண்டிருந்த காட்சியும் பெரியவர் கண்களுக்குப் பட்டது, எல்லாம் நூதனமாக யிருந்தது.

"தாதா! நீ கவலைப்படக்கூடாது" என்று மெதுவாகச் சொன்னன் ரத்தினப்பா, எங்கே பெரியவருக்கு அங்கேயே மாரடைத்துப் போய் விடுகிறதோ என்ற அச்சம் அவனிடம் குடி கொண்டே விட்டது. 'தாதா!' உலகம் ஒரே மாதிரி இருக்காது. எவ்வளவு நாட்களுக்கு பழைய சாமான்களே இருப்பது? மேலும் நாம் எது நல்லது என்று நினைக்கிறேமோ அதைத்தானே செய்யவேண்டும்?

"ஒரு வேலை சம்பாதிக்க எல்லா தந்திரங்களையும் நீ செய்ய வேண்டும். வேலையில் கைதேர்ந்தவன் என்று அவர்களிடம் சொல். நானும் அப்படியே உனக்கு ஒரு 'சர்டிபிகேட்' எழுதிக் கொடுக்கிறேன். இதை யெல்லாம் நீ எப்படிச் செய்கிறாய் என்பதைப் பற்றிக் கவலையில்லை; நீ ஒரு வேலை சம்பாதித்து விடவேண்டும். அவ்வளவுதான்."

தந்திரங்கள்! தந்திரங்களை உபயோகப்படுத்துவது? இப்படித்தான் மனிதர்கள் வேலை சம்பாதிக்கின்றார்கள். நல்லது, எப்படியாவது அவருக்கு வேலை கிடைக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்ரீமதி கந்தய்யாவின் மூச்சு நின்றுவிடும்.

அவள் மாண்டு விடுவாள். அப்புறம் அவர் தனியாக மிச்சமுள்ள கொஞ்ச நாட்களைக் கழிக்க வேண்டும். இதுவரையும் பல வருஷங்களுக்கு அவர்கள் ஒன்றாயிருந்துவிட்டு இப்போது பிரிவதென்றால்...... அவர்—கந்தய்யா, இதை அனுமதிக்கப் போவதில்லை. மனித நம்பிக்கைக்கு எல்லையுண்டா?

ஆதலின் ரத்தினப்பாவும் தமது நிலையை எடுத்துக் கூறி விவாதித்தனர். இந்த வயதில் வேலை தேடுவது தம்மால் இயன்ற காரியமா? என்று அவர் கேட்டார். தம்மிடம் வருஷக்கணக்கில் க்ஷவரம் செய்து கொண்டிருந்தவர்களெல்லாம் இப்போது மாம்பலத்தில் குடியேறிவிட்டதாகக் கூறினர், தன்னிடம் இன்னும் ஏராளமான வாடிக்கைக்காரர்கள் க்ஷவரம் செய்து கொள்வார்கள் என்றும், ஆணையிட்டுச் சொன்னர் கந்தய்யா. ரத்தினப்பா இதையெல்லாம் நம்பினனா? சிரித்துக் கொண்டே:

"தாதா! வேறு வழி யில்லை. நீங்கள் சனிக்கிழமை போய்விட வேண்டியதுதான்" என்று முடி

வாகக் கூறிவிட்டான் அவன். சனிக்கிழமை மாலை கடையைச் சுற்றி நோக்கினர் கந்தய்யா. அவரது உடல் கிடுகிடுவென்றுடியது. ஒரு நீண்ட மூச்சுடன் வெளியே வந்துவிட்டார் கிழவனர்.

இரவில், வீட்டில், தமது மனைவியிடம் விஷயத்தை சொல்லி 'ஓ' வென்று கதறினர். அவளும் கதறினள்.

ஆண்டவன் நகைத்தான்.

"நம்பிக்கைக்கு வழியில்லை. உனக்கோ வயதாகி விட்டது. அவர்களுக்கோ இளைஞர்கள் தேவை. வாழ்க்கை இப்படித்தானிருக்கும். இங்கு நான் ஒரு சுமை. நான்மட்டும் உனக்கு குறுக்கே யில்லாதிருந்தால் —".

அப்போதே கந்தய்யாவின் கைகள் அவளது வாயை மூடியது.

அடுத்த செவ்வாயன்று ரத்தினப்பா கந்தய்யா வீட்டில் தோன்றினர். கந்தய்யாவோ அவரை வரவேற்ருர்.

"கந்தய்யா! நான் ஒரு தவறு செய்து விட்டேன்? நீ என் கடைக்கு திரும்பவும் வந்துவிடவேண்டும். நீ அந்த பழைய நாற்காலியண்டையே இருக்கலாம். இன்னும் நான்கு ரூபாய்கள் சம்பளமும் உயர்த்தியிருக்கிறேன். என்ன, நாளை காலையில் வந்து விடுகிறாயா?" என்று படபடப்புடன் கூறினன். ரத்தினப்பா.

'தாதா ஆகட்டும்' என்று கூறி மனதார ஒரு கும்பிடு போட்டார்.

கிழவனர் உள்ளே சென்று தமது மனைவியிடம் சங்கதியைக் கூறினர். அவளால் முதலில்நம்பவே முடியவில்லை. அந்த அதிர்ஷ்டச் செய்தியைக் கேட்ட அவள் ஆனந்த பாஷ்யம் பெருக்கினள். கிழவனரோ விம்மி விம்மி அழுதார்.

"எப்படி விஷயத்தைச் சாதித்தீர்கள்?" என்று கேட்டாள் மனைவி.

கிழவர் சொன்னர்:—

"என்னை எஜமான் வேலைக்குக் கூப்பிட்டதற்கு வாடிக்கைக்காரர்களே காரணம். ஆக, இந்த வாடிக்கைக்காரர்களில் பலர் கடைக்கு. வந்து கேட்பதும், இல்லையென்று அறிந்ததும் போய்விடுவதுமாக இருந்தார்கள். தொழிலைக்கைவிட முடியாததலின் ரத்தினப்பா என்னை எடுத்து கொள்ளும்படி ஏற்பட்டு விட்டது.'

"எனக்கு ஒன்றும் விளங்கமாட்டேனென்கிறதே! வாடிக்கைக்காரர்களா? எந்த வாடிக்கைக்காரர்கள்?... என்று கேட்டாள் கிழவி.

"அமிர்தம்! இந்த உலகத்தில் உனக்கு வேலை வேண்டுமானல் எல்லா தந்திரங்களையும் கையாளவேண்டும். ரத்தினப்பா தான் எனக்கு இதைச் சொல்லிக் கொடுத்தான். அது ரொம்ப சரியான விஷயம். பழையபடி எனக்கு வேலையும் கிடைத்து விட்டது. சம்பளமும் உயர்ந்தது.....எல்லாம் தந்திரத்தின் பயன் தான்?"

"வாடிக்கைக்காரர்களாவது? வண்டைக்காயாவது? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனல் பழைய வாடிக்கைக்காரர்க ளெல்லோரையும் எனக்குத் தெரியும்' எனக்கு வேலை போய்விட்டதும் அவர்களில் பலர் வீட்டுக்கு நேரில் சென்றேன்.

ஒவ்வொருவரிடமிருந்தும் நான் ஐந்து ரூபாய் கடன் வாங்கினேன். திங்கட்கிழமை காலையில் கடைக்கு வந்தால் காசைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக நான் அவர்களுக்குக் கூறியிருந்தேன். எல்லாம் கடைக்கு வந்து என்னைக் கேட்டுவிட்டு பின்னர் வெளிநடந்தார்கள்."

நமது பத்திரிகை

எல்லா சுதேசமித்திரன் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

மானேஜர்.

வந்தனம்

நமது 'சந்திரோதயம்' ஆசிரியர் ஸ்ரீ. என். விஜயகுமார் அவர்களுக்கு சென்ற வியாழக்கிழமை (27-8-1936) ஆண்டவன் அருளினலும், உங்கள் ஆசீர்வாதத்தினலும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

இம் மங்கள விழாவைக் கருதி, தந்திகளும் வாழ்த்துச் செய்திகளும் அனுப்பிய எல்லா நண்பர்களுக்கும் என். வி. குமார் சார்பாக என் வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

—மானேஜர்.

ஜப்பானின் சினிமா தொழில்

[ஸ்ரீ. ஷேக் இப்தகர் ரஸுல்]

சினிமாப் படங்களைத் தயாரித்துத் தள்ளுவதில் ஹாலிவுட்டுக்கு அடுத்த ஸ்தானத்திலிருப்பது ஜப்பான்தான்.

முதலில் ஒலி படங்கள் ஏற்பட்டபோது அமெரிக்கப் படங்கள் தத்தளித்தன. பாஷைத் தகராறு பலமாக இருந்தது. ஆனல் ஜப்பானிலோ, உண்மை வேறு விதம். மேற்கு தேசத்திய படங்களையே வரவழைக்கலாகாது என்ற உணர்ச்சி ஜப்பான் உள்ளத்தில் வேரோடி வந்தது. அந்த மேற்கு தேசத்திய படங்கள் தங்கள் நாகரிகத்திற்கும், நன்னெறிக்கும் உலை வைத்துவிடுமென்பதையும், கண்டனர். தவிரவும் இந்த கைத்தொழிலினல் பணம் யெடுக்கலாமென்பதும் அவர்கள் கருத்தில்பட்டது.

1934-வது வருஷத்தில் மஞ்சூரியப் பிரச்சினை இன்னும் இதை அதிகப்படுத்தியது. எல்லாவற்றையும் ஜப்பானே உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. அன்னியர்களின் கருத்துகள் பயனுள்ளவைகளாக இருந்தால்மட்டுமேசகித்துக் கொள்ளப்பட்டன. படங்கள் இறக்குமதிக்கு காப்பு வரிகள் உயர்த்தப்பட்டன. ஜப்பான் கைத்தொழில் விருத்தியடையஆரம்பித்தது.

> ஸ்ரீ. ஷேக் இப்தகர் ரஸுல் ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிப்பவர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு மனிதர். இவரது எழுத்துக்களை வட இந்தியாவிலுள்ள பிரபல பத்திரிகைகளில் காணலாம். இவர் உலகம் பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தவர். ஹாலிவுட்டில் காலஞ்சென்ற ரொடொல்ப் வேலண்டினேவுடன் நடித்தவர். இவர் பெரிய அநுபவசாலி. ருஷ்யாவில் இவருக்குப் பெருமதிப்பு உண்டு என்று சொன்னல் நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது.
>
> இவர் நமது 'சந்திரோதயத்'துக்கென பிரத்தியேகமாக இந்தக் கட்டுரையை அனுப்பியுள்ளார். அதற்காக எமது நன்றி இவருக்கு உரித்தாகுக.
>
> —ஆசிரியன்.

டோகியோவிலும், கோயாடோவிலும் ஸ்டுடியோக்கள் கட்டப்பட்டன. மேற்கு தேசத்திய நுணக்க நிபுணர்கள் அவைகளில் அமர்த்தப்பட்டனர். சரித்திர சம்பந்தமான படங்கள் தயாரிக்கப்பட்டன.

இம்மாதிரி மத்தியகாலத்து சரித்திர சம்பந்தமான படங்களில் காதல் இருந்தது, காமம் இருந்தது, வீரம் மிளிர்ந்தது; தேசாபிமானம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. வாட்போரும் (கென்டோ) ஜொலித்தது. இதன் காரணமாக ஜப்பானியர்களிடையில் பாவுணர்ச்சி ஏற்பட்டதன்றி, வாட்போர், குத்துப்போர், மற்போர் இவைகளிலும் சூரர்களானர்கள். எல்லாவற்றிற்கு மேலாக சிறந்த தேசாபிமானிகளானர்கள்.

மௌனப்பட நாட்களில் அமெரிக்கப்படங்கள், ஜப்பானிய ஸ்டுடியோக்கள், அமெரிக்கப்படங்கள் எத்தோ,ஸ்கோசிக்கு, நிக்கூட்டுரை என்றஇடங்களில் தயாரிக்கப்பட்டன. இதனல் அமெரிக்கப் படங்கள் 'தாளம்' போடும் நிலைமைக்கு வந்துவிட்டன. இதற்கு முன்பு தயாரிக்கப்பட்ட ஜப்பான் படங்களில் முடிவற்ற கத்தி சண்டைகளைத்தான் காணமுடியும்.

சில அமெரிக்கப்படங்களைப் பார்த்த ஜப்பானிய இளைஞர்களில் சிலர், தங்கள் தேசத்து படத் தொழிலில் புரட்சி ஏற்படுத்த விரும்பினர்கள். தவிரவும் குடியானவர்களும், கிழவர்களும்தான் பழைய முறையில்—அதாவது சண்டைப் படங்களை விரும்பினர்கள். ஆனல் இளைஞர்களோ நவின விஷயங்களையும், ஐரோப்பாவின் படங்களையும் திரைமீதுகாண ஆசைப்பட்டார்கள்.

ஆதலின், ஷிம்பா செகி (ஜப்பானிய வாழ்க்கைச் சரித்திரங்கள்) தயாரிக்கப்பட்டன. படக்காட்சி நக்ஷத்திரங்கள்பிரபலமடைந்தனர். ஆனல் இப்போதும், பாரம்பரைக் கூத்தாடிகளும், மட்டாச நடிகைகளுமான சாபுகிகள் வருஷத்திற்கு 10,000 பவுன்களுக்குமேல் பெற்று வருகின்றனர். சினிமா உலக நடிகர்களோ, வருஷத்திற்கு 3000 பவுன்களே பெற்று வருகின்றனர்.

இந்த ஷிம்பா செகி படங்கள் விரைவில் செல்வாக்குப் பெற்றுவிட்டன. ஐரோப்பியப் படங்கள் இதன் பயனக 80-விருந்து 50 சத விகிதத்திற்கு வீழ்ந்துவிட்டன.

டாக்கிகள் வந்தபோது ஐரோப்பியப் படங்கள் 20 சத விகிதத்திற்கு வீழ்ந்துவிட்டன. ஜப்பானில் மிக மிகச் சிலரே ஆங்கிலம் பேசுவார்கள். ஆதலின் டோக்கியோ, அஸோகோ, கோபை, கோயாடோ ஆகிய இடங்களில் ஏறக்குறைய மேனுட்டுப் பேசும் படங்கள் இப்போது 'சில்லரை' த் தியேட்டர்களிலேயே காண்பிக்கப்படுகின்றன.

இதிலும் ஜப்பானிய சர்க்காரின் சென்சார் போர்

டாரின் பயங்கரமான கத்தரிகளும் சேர்ந்து விடும்போது மேனாட்டுப் படங்கள் சூன்யமாகிவிடுகின்றன.

சிம்பா கெசியில் கொள்ளைக்காரர்கள் வாழ்க்கை, மாணவர்கள் வாழ்க்கை, தற்போதைய சமுதாயம், சண்டையிடுவது, தொழிலாளர்கள் கஷ்டப்படுவது, பெற்றோர்கள் அநுமதியில்லாது ஆணும் பெண்ணும் காதல்கொள்வது இவைகளெல்லாம் காட்டப்படுகின்றன. கடைசியாகக் குறிப்பிட்ட அம்சம் ஜப்பானிய வாழ்க்கையில் உண்மைக் காதலைக் கொன்றுபோட பெரிதும் 'உதவி'யாக இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டே யாகவேண்டும்.

ஷிம்பாகெசிக்கு ஒரு உகாரணம், சமீபத்தில் ஜப்பானில் காட்டப்பட்ட 'நிரந்தரமான காதல்' என்ற பேசும் படத்தின் வரலாறு இதுதான். ஒரு பெண், தனது தகப்பனார் தேர்ந்தெடுக்கும் கணவனைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டி தன் காதலனை கைவிட்டுவிடுகிறாள். இந்த தகப்பனால் தேர்ந்தெடுக்கப்பட்டவனோ வயோதிகன்; ஆனால் பணக்காரன். அவன் கட்டிக் கொண்டால்தான் அவளது குடும்பம் அழிவினின்று காப்பாற்றப்படும். மணப் பெண்ணின் குடும்ப நிலையை அறிந்த அவனோ திடீரென்று அவளைக் கைவிட்டுவிடுகிறான். பின்னர் அவளோ மற்றொரு மனிதனுடன் — இவனைத்தான் அவள் கடைசியில் மணம் செய்துகொள்கிறாள். குடும்பத்தின் நிலைமையைச் சமாளிக்கிறாள். பின்னர் அவள் தனிபட்ட வாழ்க்கை நடத்துகிறாள். அதிலிருந்து அவளது கணவன் தனதுமீது பாரத்தைப் போட்டுக்கொண்டு எல்லாக் காரியங்களையும் நடத்துகின்றான். இதுதான் கதை. இந்தக் கதை ஜப்பானியர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. ஜப்பானியர்கள் விம்மி விம்மி அழுவதையே பெரிதும் விரும்புகின்றனர். அழுதாலொழிய சினிமாவுக்காகக் கெலிக்கும் காசில் அவர்களுக்கு திருப்தி ஏற்படாது. அவர்கள் ஹாஸ்யத்தையும் விரும்புகிறார்கள். 'மிக்கி மவுஸ்' 'சாப்ளின்'— இவர்களின் படங்கள் பெரிதும் ரஸிக்கப்படுகின்றன. 'கணவன் மனைவி' காமிக் படங்களுக்கு ஜப்பானில் பஞ்சமே கிடையாது. ஜப்பானிய ஜிதாய் செகி படங்களை ரஷ்யா பெரிதும் ரஸித்து வந்தது. இது 1928-ல்-1930-ல், 'அவளை அப்படிச் செய்ய வைத்தது எது?' என்ற படத்தை (இது ஜப்டானியர்கள் அன்றாட வாழ்க்கையைக் குறிப்பது) ஜப்பான் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டது. இது மாஸ்கோவில் நிரந்தரமான செல்வாக்கை அடைந்துவிட்டது.

ஷேக் இப்தகர் ரஸூல்

ஆனால் இன்று ஜப்பானில் ஒரு பெரும் புரட்சி. இன்று அங்கு கல்வி சம்பந்தமான படங்களே ஆயிரக் கணக்கில் தயாரிக்கப்படுகின்றன. ஒஸாகா மைனிச்சி-என்ற தினசரியின் ஆதரவில் தயாரிக்கப்படும் செய்திச் சுருணைகளோ எண்ணற்றவை. இவைகள் காலேஜ்களிலும் கலாசாலைகளிலும் காட்டப்படுகின்றன.

செலுலாயிட், இன்னும் இதர மூலம் பொருட்கள் (Raw Materials) ஆகிய யாவும் ஜப்பானிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஐரோப்பாவோ இதைக் கண்டு வயிறெரிகிறது. ஆனால் என்ன செய்ய முடியும்?

ஜப்பான் இன்று அபிவிருத்தியடைந்து வருவதற்குக் காரண பூதங்களாயிருப்பவைகளுள் அதனது சினிமாக் கைத்தொழிலும் ஒன்று—அதிலும் பிரதானமானதொன்று.

அடுத்த இதழில்

ஸ்ரீ. ஷேக் இப்தகர் ரஸூல் எழுதிய மற்றொரு கட்டுரை வெளிவருகிறது.



மன்றோ ப்ரௌன் என்னும் பிரசித்திபெற்ற குத்துச்சண்டைக்காரர்

‘மேன்மையானது எது?’

[ஸ்ரீ. ஜே. ஸி. ப்ளூகெல் பி. ஏ. டி. எஸ்ஸி.]

> இக்கட்டுரை லண்டன் சர்வ கலாசாலை மனோதத்துவ உதவிப் போசிரியர் ஸ்ரீ. ஜே. ஸி. ப்ளூகெலால் எழுதப்பட்டதாகும். இவர் பல உயரிய நூல்களின் ஆசிரியருமாவார். இவர் கூற்றை நாம் அடியோடு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஓரளவுக்கு ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளோம். அதன் காரணமாகவே இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப் படுகிறது. —ஆசிரியன்

“நமது ஆடைகளை அகற்றிவிட்டால், நம்மை அழுத்திக் கொண்டிருந்த செயற்கைப் பாரம் ஒழிந்து விடுகின்றது; அதாவது ஒரு விதத்தில் நாம் இபற்கைக்குத் திரும்பி விடுகிறோம்.” என்கிறார் அந்த பிரசித்திபெற்றி சில்பியும் தத்துவ சாஸ்திரியுமான ஸ்ரீ எரிக் ஜில். அதே சமயம் உடைகளும் இயற்கையில் ஒரு பகுதிதான் என்கிறார் அவர். வாஸ்தவம்! நமது சர்மமும் ஒரு உடை என்பதை யார் மறுக்க முடியும்? உண்மையில் நிர்வாணமாவதற்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது நமது தோலை உரித்துத்தள்ளுவதே அது. எப்படியும் நிர்வாணத்தை அநுஷ்டிப்பது என்ற முடிவுக்கு வந்து விட்டவர்களுக்கு இது மஹா பயங்கரமான தியாகமாகத் தோன்றவும் கூடும்.

இந்த இடத்தில், ‘இயற்கை’ என்பதென்ன? என்ற சங்கடமான பிரச்சினையில் நாம் தலையிட வேண்டியிருக்கிறது.

ஒருவிதத்தில், நாம் செய்யும் காரியங்கள் இயற்கை; எண்ணும் எண்ணங்கள் இயற்கை; எல்லாம் இயற்கையாகவே காணப்படுகின்றன. இன்னும் கொஞ்சம் எட்டிப்போனால், ‘இயற்கையில் மனிதனும் ஒருபகுதி’ என்ற உண்மையும் புலனாகிறது. ஆனால் இந்த அர்த்தத்தில் இந்தப் பதத்தை உபயோகப்படுத்தினால், இது தவறாகவும், முன்னுக்குப் பின் முரணாகவும் இருக்கின்றது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அப்போது, ‘இயற்கை’ ‘இயற்கை யல்லாதது’ என்ற வார்த்தைகளுக்கு குழப்பமான அர்த்தமே தொனிக்கிறது. இயற்கையில் எல்லாம் அடங்கிக் கிடக்கிறதென்றால், அப்போது ‘இயற்கையல்லாதது’ என்ற வார்த்தைக்கே இடமேது? மனிதர்களைப் பொறுத்தவரையில் தந்தியில்லாச் செய்தியம், ஆகாய விமானமும், காற் பெருவிரலும், சந்திரனிலுள்ள அணுக்களும் இயற்கைதான் என்று சொன்னால் நம்புவதற்கு முடியாத விஷயம். வேண்டுமானால் இந்த இயற்கையை செயற்கைப் பொருட்களுடன் இணைத்துப் பேசலாமே ஒழிய, இயற்கையல்லாதது என்பதனுடன் சம்பந்தப் படுத்துவது இயலாத விஷயம். இவ்வாறு ஒப்பிடுவதிலும் கஷ்டங்கள் இல்லாமலில்லை. இந்த இரண்டு பதங்களுக்கும் இடையிலுள்ள அர்த்தங்களை திட்டமாக வரையறுத்துக் கூறுவது மஹா கடினம். இயற்கை யென்பது உள்ளத்தில் தோன்றியது; உடலோடு வளர்வது, இதை அறிவும் ஆத்மசக்தியும் மாற்ற முடியாது. செயற்கை என்பது, மனித மூளையின் உயரிய சக்தியால் சிருஷ்டிக்கப்பட்டது. இவைகளை திருத்த முடியும்; அழித்துப்போடவும் முடியும்.

இதை வைத்துக்கொண்டு பாக்கையில் நமது சர்மம் இயற்கை, ஆனால் நமது உடைகள் செயற்கையானவைகள். ஒவ்வொரு இரவிலும் சரி, நாம் நீராடும் போதும் சரி, நாம் உடைகளை அகற்றிவிடுகிறோம். ஆனால் சர்மத்தை அகற்றிவைப்பது என்பது கருதவும் முடியாத ஒரு கண்ட்றாவி. இந்த கொடுமையான ‘சத்திரசிகிச்சை’யினால் மனிதன் உயிர்வாழ முடியுமா?

நாம் பூரா சர்மத்துடன் பிறந்தோம். ஆனால் அப்போது பூராவும் உடையற்றுக்கிடந்தோம். வீட்டிலுள்ள ‘பெரியவர்கள்’ மட்டும் நமக்கு உடைமுதலியவைகளை உடுத்தாதிருந்தால், நாம் பல வருஷங்களுக்கு நிர்வாணமாகவே இருந்திருப்போமென்பதில் சந்தேகமில்லை.

இந்த உண்மைகளை யெல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கையில் தனது உடைகள் அகற்றப் படுகையில் மனிதன் இபற்கையில் மீண்டும் ஐக்கியமாகிறான் என்று நிர்வாண இயக்கத்தினர் ஒருவர் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. நமது உடைகளைவிட நமது நிர்வாண சரீரங்களே மிகவும் இயற்கையாகின்றன என்று கூறுகையில், இதில் பெரிதும் உண்மை அடங்கிக் கிடக்கிறது. ஆனால், இந்த முறையில் இயற்கைக்குத் திரும்புவதென்பதுதான் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. நாகரிகத்திற்கு அடிப்படையானவை ஆடைகளே யென்றும், நிர்வாணத்திற்குத் திரும்புவது, காட்டுமிராண்டித்தனத்துக்கு திரும்புவது என்றுதான் அர்த்தமென்றும் டாக்டர் லெனார்ட் வில்லியம்ஸ் கூறுகிறார். இதில் சொல்லவேண்டியது, ‘இது இயற்கைக்குத் திரும்புவதல்ல, காரணத்திற்குத் திரும்பு

வது' என்பதே.

நமது நாகரிகம், இயற்கை—இரண்டிலும், அடங்கியுள்ள கொள்கைகளுக்கு காரணம் மிகவும் பிரதானமான அம்சமாகும்.

நமது வம்சம் இன்பமாக வாழ்க்கை நடத்தவும், முன்னேறவும் நாகரிகம் உதவி செய்கிற தென்னமோ உண்மை. இந்த நாகரிகமோ காரணம் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாகரிகத்துடன் ஏராளமான காரண மல்லாதவைகளும் சென்று கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணமென்ன? மனிதனது அறிவு சில பகுதிகளில் மட்டுமே காரணத்தைக் கடைப்பிடித்து நிற்க முடியும். நாகரிகமடைந்த மனிதன்கூட நீண்ட நாளைக்கு காரணத்தோடு நடந்து கொள்ளமுடியாதென்பதை நாம் கண்டு விட்டோம். பழக்கங்கள், முறைகள், ஆசாரங்கள், அச்சம், தயை, தாக்ஷண்யம், மூட நம்பிக்கைகள், பரம்பரை வழக்கங்கள் இவையெல்லாம் அவனைப் பிடித்து ஆட்டும்போது காரணம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறது.

உடைகள் பாதுகாப்பு வேலைகளுக்கும், அலங்கார வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றன வென்பதை நாம் இப்போது ஒப்புக்கொள்ளலாம். உடைகள் குளிரையும் தடுக்கும்; உஷ்ணத்தையும் தடுக்கும். கடுங் காற்றையும் எதிர்க்கும்.

"உடைகள் தொழிலுக்கும், நம்மைச் சுற்றி யிருக்கும் அந்தஸ்துகளுக்கும் ஏற்றவாறு நம்மை அலங்கரிக்கும். எப்படியும் உடைகள் அவசியம். பட்சிகள் நிர்வாணமாக இல்லை. இறகுகள் நன்றாக மூடியே இருக்கின்றன. உடைகள் அலங்காரத்திற்கும் உபயோகப்படுகின்றன என்ற உண்மையை எடுத்துக் கொண்டால், அது தேகத்தை விஸ்தரிக்கின்றது என்பதே மிகவும் பொருத்தமாக இருக்கும். உடைகளின் பல்வேறுவித தோற்றம், வர்ணம் ஆகியவை நமது அழகை அதிகப்படுத்துகின்றன. என்ன தான் நிர்வாண உடல் அழகு வாய்ந்ததாயிருந்தபோதிலும், இது மாதிரி வர்ணபேதங்களின் அழகை அது சிருஷ்டிக்கமுடியாது. உடைகள் இருப்பதால்தான் ஒருநாட்டு மனிதர்களுக்கும் மற்றொருநாட்டு மனிதர்களுக்கும் வித்தியாசம் தெரிகிறது. போலீஸ்காரருக்கும் ஐஸ்—ப்ரூட் விற்பவனுக்கும் வித்தியாசம் உடையில்தான் 'டக்' கென்று தெரிகிறது" என்றும் காரணங்கள் சொல்கிறார்கள்.

அடக்கம், சம்பிரதாயம் என்பவைகளுக்காக உடைகளை உபயோகப்படுத்துவதென்பது பெரிய தர்க்கத்துக்கு உரித்தான இடம். சமூதாயத்தின் தேவைகள், பழக்க வழக்கங்கள் இவைகளையெல்லாம் 'காரணத்தின்' மன்றத்தில் விசாரித்தால், கட்டாயம் அவைகளுக்கு தண்டனை கிடைத்துவிடும். மழைகாலம் வெய்யிற்காலம்---எந்தக் காலமாயிருந்தாலென்ன? உள்ளே பனியன், மேலே வெஸ்ட் கோட், அதற்கு மேலே ஒப்பன் கோட், அதற்கு மேலே 'மப்ளர்', ரோலிங் காலர், எல்லாவற்றையும் அணிந்து திரிவது தான் உடை அழகு என்றால் அது ஒருவருக்கும் வேண்டியதில்லை. உடைகள் பிரயோசனகரமானவை, கலா சௌந்திரிய முள்ளவை என்றே ஒப்புக்கொள்ளலாம். ஆனால், "இவைகளில்லாமலே இருந்திருந்தால் நன்றாக யிருக்கும், அழகாக இருக்கும் என்று நாம் நினைக்கும் சந்தர்ப்பங்களே இல்லையா? "சனியன், இந்தத் துணிகள் ஒரு தொல்லை" என்று நினைப்பதில்லையா? "உஸ்! என்ன புழுக்கம்" என்று கூறி உடைகளை அவிழ்த்தெறிந்து உடலை காற்றுப்பட விடுவதில்லையா? இயற்கையில் உடலை நிர்வாணமாகவே காட்ட மனித உள்ளத்தில் விருப்பமிருந்தும், கட்டுப்பாடுகளும், சம்பிரதாயங்களும், மூட நம்பிக்கைகளும் அவன் கண்களை மறைக்கின்றன. உடைகள் அந்தஸ்தை நிலைநாட்டுவதாகவும் கருதுகின்றனர். நாகரிகம் வளர வளர, அது புராதன சமுதாயத்திலிருந்த எவ்வளவோ கட்டுப்பாடுகளையும், சம்பிரதாயங்களையும், அழித்துப்போட்டுவிட்டது. நிர்வாண உடல் சம்பந்தமான இந்தக் கட்டுப் பாடுகளையும், வீண் அபிப்பிராயங்களையும் அது உடைத் தெரியக் கூடியதென்பதில் ஐய முண்டா?

இப்படி உடனே செய்வதென்றால் இயலாத விஷயம்தான். இவ்வளவு தூரம்சொல்லி வந்ததிலிருந்து நிர்வாணம் இயற்கை யென்றும், எவ்வளவு தான் இன்ப மளிப்பவைகளாகவும், வசதியுள்ளவைகளாக இருந்தாலும் உடைகள் செயற்கைப் பொருட்களே என்பதும் தெளிவாகியது. ஒரு நல்ல காரணத்திற்காகவே, நம் உடைகளை அவிழ்த்தெறிய வேண்டும் என்றும், தாழ்மை, சௌகரியம் இன்பம், ஆகிய இந்தத் தலைப்புகளின் கீழே இப்படிச் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ ஜில் சொல்கிறார். அதே மாதிரி சமத்துவமான உரிமையுடன் நாம் பதிலளிக்க வேண்டுமானால், நல்ல காரியத்திற்காகவே, அதாவது எப்போது உடலுக்கு அந்த மாதிரி பாதுகாப்புத் தேவையோ, எப்போது நாம் இன்னும் அதிக சக்தி யுடைய கவர்ச்சிப் பொருட்களாக ஆக விரும்பு

கிறேமோ, எப்போது சமீபத்தில் பிறர் நம்மை கண்டு கொள்ள வேண்டுமென்று கருதுகிறோமோ, அப்போதுதான் உடைகள் உடுத்தவேண்டுமென்றும் நாம் கூறலாமல்லவா? அடக்கமோ, வெட்கமோ—காரணத்திற்குள் அடங்குவதில்லை. கள்வெறிச் சக்தி நிறைந்த தோற்றமும் காமத்தைக் குபீரென்று பற்றி எறியச் செய்யும் சக்தியும் நிர்வாண உடலுக்கு இருப்பதாகவும் அவைகளை மறைக்கவே ஆடைகள் பயன்படுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அதே சமயம் உடைகள் மனிதக் கண்களை அளவுக்கு அதிகமாகக் கவர்வதோடு, அவைகள் உள்ளிருக்கும் உடலின் அழகைக் காணவேண்டுமென்ற எண்ணத்தை அதிகமாக உண்டாக்கி விடுகின்றது. பெண் குழந்தை நிர்வாணமாக உலாவும் போது மனதில் சிற்றின்ப உணர்ச்சி எழுவதில்லை. ஆனால் பாவாடை—அதன் இடையில் ஏறும்போதே நம் மனதிலும் சிற்றின்ப வெறி ஆதிக்கம் பெற்றுவிடுகிறது. காரணம் உடையால் உடல் மறைக்கப்படுகையில், அவ்வுடல் அனுவசியமாக பிறர் கண்களில் சிற்றின்ப வெறியைக் கொட்டும் கருவியாகி விடுகின்றது. மறைவிலிருக்கும் மர்மத்தை அறிய மனித உள்ளம் ஆவல் கொள்வது சர்வ சாதாரணம். நிர்வாணம் மனிதனிடத்தில் திடீரென்று காம வெறியைக் கிளறி அவனை கடூர ஜந்துவாக்கி விடுகின்றது என்று சிலர் கூறுகின்றனர். இன்னும் சிலர் நிர்வாணம் நல்லதுதான்; ஆனால் அதனால் இயற்கையாக இருக்கும் சிற்றின்பம் அழிந்து விடுகிறது என்றும் கூறுகின்றனர். உடைகள் உடலை மறைப்பதோடு, அவைகளை அலங்காரமும் செய்கின்றனவாதலின், அவைகளுக்கே கிளர்ச்சியைத் தரத் தக்க சக்தி இருக்கிறதென்பது வெளிப்படை. ஆனால் நிர்வாண உடலோ, இம்மாதிரி காமத்தைக் கிளப்புவதில் உக்கிரத்துடன் வேலை செய்வதில்லை. இரண்டாவது கூற்று சர்வ ஜாக்கிரதையுடன் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. சிலருக்கு சிற்றின்ப உணர்ச்சி கூட மிகவும் லேசாகவே அமைந்துள்ளது. அவர்களது அத்தகையை லேசான உணர்ச்சிகளை அதிகமாக வேண்டுமானால், அதாவது பூரணமாக எழச் செய்ய வேண்டுமானால் அதற்கு அத்தகைய எழுச்சியை உண்டாக்கத் தக்க பலமான குஷிப் பொருட்கள் இருந்தாக வேண்டும். சிலர் சாதாரண உணவுடன் திருப்தியடைகின்றனரல்லவா? அதே மாதிரி உடையலங்காரங்கள், இன்னும் இதர செயற்கை ஜோடிப்புகள் இவைகளற்ற நிர்வாண உடலிலேயே சிலர் திருப்தி காண்கின்றனர்.

இவர்களுக்கு நிர்வாணம் இன்ப ரஸமாகும். இவர்களுக்கு இயற்கை அடங்கிய நிர்வாணம் மிகவும் ருசியை அளிப்பது. இத்தகைய எளிமை வாய்ந்த ஆத்மாக்களையே நிர்வாணம் பெரிதும் கவர்கிறது. இம்மாதிரி நிர்வாணக் காதலர்கள், பகுத்தறிவில் குறைந்தவர்கள், நாகரிக மற்றவர்கள், என்று கூறுவதில் அர்த்தமே கிடையாது. உண்மையான நாகரிகமானது எளிமையானதும், அதிகமாக இயற்கை உள்ளதுமான இன்பத்தை ரஸிக்கச் செய்வதில்தான் அடங்கியுள்ளது. விமானத்தில் பறக்கலாம்; மோட்டாரில் போகலாம்; படகை ஓட்டலாம்; ஆனால் இவைகளிலுள்ள இன்பம் நடப்பதிலும், நீந்துவதிலும் இல்லையென்று கருதுவது பகுத்தறிவென்று யாராவது கூற முடியுமா? நிர்வாணம் மனித உடலிலுள்ள இன்பத்தைப் பலி கொடுக்காது, உடைகளை விரும்புவது உத்தமம். ஆனால் நிர்வாணமாக இருப்பது அதைவிட மேன்மை.

தயார்! தயார்!!

விநோதக் காதலன் : : : :

: : : : விபரீத விளைவு

என்ற ஓர் ஹாஸ்யக் கதை. சினிமா படமெடுக்கத் தகுந்தது.

இது

சினிமாத் தொழிலில் பத்து வருடங்களுக்கு மேல் நன்றாய் அநுபவம் வாய்ந்த டேக்னிஷியனால் எழுதப் பெற்றது. ஆரம்ப முதல முடிவு வரையில் விடா நகப்பை தரும் இக்கதையையும் சீட்டும் கண்டும் இருக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம்.

ஸினரியோ, கதை, டைரெக்ஷன் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

P. P. SAMY,
c/o Chandrodayam
Washermenpet, MADRAS.



டாக்டர்கள் அவசியமா?

[பிம் ஸிங்]

மிருகங்களின் உலகத்தில் டாக்டர்கள் இல்லை. பூச்சி, புழுக்கள் உலகத்தில் இல்லை; பட்சிகள் உலகத்தில் இல்லை. மனிதன் உலகத்தில்தான் டாக்டர்கள் இருக்கின்றனர். இந்த மனிதன் மிருகங்களையும், பூச்சி புழுக்களையும் தன் கீழ் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறான். இப்படிச் சொல்வது மனிதன் என்ற மிருகம் மட்டுமே வியாதிக்கு உட்பட்டிருக்கிறது என்பதாகாது. ஆனால் மிருகங்கள் இயற்கையால் நல்ல தேகாரோக்கியத்துடன் பிறந்தன. இயக்கை தரும் உணவை உண்டும் இயற்கையின் தீர்ப்புகளுக்கு உட்பட்டும் சுகமாக வாழ்கின்றன. அவைகளுக்கு எதிரிகளில்லாமலில்லை. முதலாவதாக மனிதர்களே அவைகளுக்குப் பெரிய எதிரிகள். வலிமை சற்று அதிகமாக உள்ள மிருகங்கள் எளிய மிருகங்களைத் தாக்குகின்றன, அவைகளைப் பாம்புகள் பிடுங்குகின்றன. பயங்கரமான சிலந்திகள் கொன்றே போட்டு விடுகின்றன. ஆனால் மொத்தமாகப் பார்க்கையில் மிருகாசிகள் சுகமாகவே காலம் தள்ளுகின்றன.

மனிதனும் 'நாகரிகம்' என்னும் மாய வலைக்குள் அகப்படும் வரையில், நன்றாகத்தான் இருந்தான். 'நாகரிகத்'தில் வீழ்ந்த பின்னரே அவன் நாசமடைய ஆரம்பித்தான். வியாதிகளைசிருஷ்டிக்கும் நிலைமையையெல்லாம் அவன் தனக்குத் தானே உண்டாக்கிக் கொண்டான். அதன் பிறகு தன் சொந்த தவறுதல்களால் விளைந்த தீமைகளைப் பரிகரிக்க ஒரு பிரத்தியேகமான வகுப்பையும் கொண்டுவந்துவிட்டான். இந்தவகுப்புதான் டாக்டர்கள் கொண்டது. நாகரிகம் தந்த செல்வமே டாக்டர்கள்.

நாகரித்தால் விளைந்த தீமைதான் என்ன? என்பதே கேள்வி.

நாகரிகமற்றவனென்று சொல்லப்படும் மனிதன் திறந்த வெளியில் வாசம்செய்து, இயற்கையான, உயிருள்ள ஆகாரங்களையே உட்கொள்கிறான். தனது ஆகாரத்தை தானே பயிராக்கி அவன் நிலைமையை அபிவிருத்தி செய்து கொள்கிறான். வசாயம் அவனை கிராமங்களில் குடியேற்றிவிடுகிறது. அங்கு அதற்கேற்றபடியான பழக்க வழக்கங்களை அவன் மேற்கொள்கிறான். ஆனால் வித்தியாசமென்ன? அந்த பழக்க வழக்கங்களுக்கு அவன் அடிமையாவதில்லை; அவைகளுக்கு அவன் எஜமானனாக இருந்து அவைகளை தனக்குப் பயன் படுத்திக் கொள்கிறான். சமையல் செய்வது என்பதை கண்டுபிடிக்கும் வரையில் அவனுக்கு ஒரு தீமையும் எழுந்ததில்லை. இந்த சமை

யல் தொழிலினால் விளைந்த சிக்கல்களே பிரமாதமானவை.

சமையல் செய்வதில் ஆகாரம் மிருதுவாகி விடுகின்றது. ருசியும் அதிகமாகிறது. ஆனால் இடையில் அது தனது சத்துக்களை (விடமின்களை) போக்கிவிடுகிறது. இதனால் ஒழுங்கான ஜீரணத்திற்கு வேண்டிய பொருள்கள் ஒன்றுமல்லாதொழிகின்றன. கரும்பிலிருந்துதான் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது; கோகோவும் அதேமாதிரிதான்—இரண்டும் இணைகையில் அது 'சாகோலெட்' ஆகிவிடுகிறது. இதை ஜனங்கள் ஏராளமாக விழுங்கிவருவதை நாம் பார்க்கிறோம். இதுமாதிரி பல உதாரணங்களைச் சொல்லிகொண்டே போகலாம். இந்த உதாரணங்கள் எதை அறிவிக்கின்றன. உயிருள்ள இயற்கை ஆகாரத்தில் சத்து பூர்ணமாக இருக்கிறது. அதன் இயற்கையான மணங்களை ஜீரணக் கருவிகள் அநுபவிக்காது, செத்துப்போன பொருட்கள், அழுகலாக்கப்பட்ட பொருட்கள், இவைகளையே அறைத்துத் தள்ளவேண்டியிருக்கிறது. அன்றாடம் 'நாகரிகத்தின்' பெயரால் தள்ளப்படும் புதுப்புது ஆகாரப் பொருட்களை உட்கொள்ளுகையில் அவைகளுக்கேற்றபடி ஜீரணக்கருவிகளும் தங்கள் போக்கை சரிப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம். இதில் எவ்வளவு சங்கடம் படிந்து கிடக்கிறது என்பதை சொல்லவேண்டியதில்லை.

முடிவு வியாதிதான். எல்லாவிதமான வியாதிகளும் எழுந்து தாண்டவ மாடுகின்றன. இவைகள் எப்படி வருகின்றன?. பெருங்குடலில் உள்ள உயிர்க்கிருமிகள் பச்சையாக நாம் சாப்பிடும் காய்கறிகளை உடைத்து ஜீரணத்திற்கு உதவியளிக்கின்றன. ஆனால் சூடாக உள்ளே தள்ளப்படும் செத்துப்போன ஆகாரம்—அநேகமாய்மாம்சம், சர்க்கரை, கொழுப்பு—இவைகளாகவே இருக்கின்றன. இவைகள் அந்த உயிர்க் கிருமிகளுக்கு மிகவும் தகுதியான ஆகாரங்கள். ஆகவே, சூடாக பதம் செய்யப்பட்டு வரும் இந்த ஆகாரத்தை அவைகள் சாப்பிட்டு விடுகின்றன. இதனால் அவைகள் கணத்தில் லக்ஷக்கணக்கில் பெருகுகின்றன. முடிவு என்ன? குடல் ஒரு சாக்கடைக் குழியாகி விடுகின்றது. ஆகாரம் பூராவையும் கிருமிகள் ஜீரணித்து விடுகின்றன. அப்போதுதான் தேகத்தின் அமைப்புமுறை ஸ்தம்பித்துவிடுகிறது. விஷம் பரவுகிறது. இரத்தமும் கெடுகிறது. உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் விஷமூட்டப்பட்டு விடுகிறது. எந்த சமயத்திலும் நமது உடலிலிருந்து, எந்த விதமான வியாதியும் வெளிப்படத் தயாராகயிருக்கின்றது. பல்நோய், வயிற்று நோய், குழிப்புண், பாரிசவாய்வு எல்லாம் சமையல் ஆகாரத்தின விளைவுகளே.

உலகத்தில் மலைக்காடுகளில் வசிப்பவர்களும், 'நாகரிகம்' என்னும் பூதகிமடியில் தவழாதவர்களும் நன்றாகவே இருக்கின்றனர். உடல்கள் கட்டு வாய்ந்து காணப்படுகின்றன. மேற்சொன்ன வியாதிகள் அங்கு அறவேதெரியாதவை. அங்கு குழிப்புண் வருவதில்லை; மூலம் மூர்க்கம் கொள்வதில்லை; வாழ்நாளும் விரைவில் முற்றுப் பெறுவதில்லை.

பிள்ளை பெறுவதைப்பற்றி எடுத்துக்கொண்டால் அதுவும் இதே நிலையில் இருக்கிறது.

காட்டு மக்களிடையில் குழந்தைபெறுவது சுலமான ஒரு வேலையாக இருப்பதைக் காணலாம். நடந்து செல்கையிலேயே வேடப்பெண் கருவுயிர்த்து பச்சைக் குழந்தையை கையிலெடுத்துக் கொண்டு அப்பால் நடந்துவிடுவாள்.

நாகரிகமடைந்த நம்மிடையிலோ விஷயம் வேறு. பிள்ளை பெறுவது ஒரு பயங்கரமான வியாதி. பல கஷ்டங்கள், திடீர் மரணங்கள், வெறும் ஆவல்கள்—இவைகளெல்லாம் இந்த வியாதியிலிருக்கின்றன. காரணமென்ன? சாதாரணமாக குழந்தை கஷ்டமின்றி வெளிவர மார்க்கமுண்டா? இருக்கிறது, ஆனால் அதிக தூரத்தில்.

கழனிகளில் வேலைசெய்து, திறந்த வெளியில் வாழும் பெண்களுக்கு குழந்தை பெறுவதில் பிறர் உதவி அவசியமில்லை என்பது தெரிந்த விஷயம். ஆனால் பணக்கார, நாகரிகமடைந்த பட்டணத்து அம்மாமார்கள் குழந்தை பெறுவதென்றால் புனர்ஜன்மமெடுப்பதை நாம் காண்கிறோம். வீட்டிற்குள் அடைபட்டு, உழைப்பதே இதற்குக் காரணம். 10 வருஷங்களுக்குப் பின்னர் சிறுமிகள் வீட்டுக்குள் அடைத்து சிறைவைக்கப்பட்டு விடுகின்றனர்.

சூரிய ரச்மி படாத சர்மம்—பயனற்று விடுகிறது. எலும்பை உருப்படுத்துவதற்கு வேண்டிய—விடமின் அதனால் இல்லாமல் போய்விடுகின்றது. எலும்பு வளர்ச்சியும் குன்றி மிருதுவான எலும்புகளும் வளைவிடுகின்றன. இதன் காரணமாகவே அங்க ஹீனமான குழந்தைகள் பல பிறக்கின்றன. கருப்பையைத் தாங்கும் எலும்புக்குழி தட்டையாகி விடுகின்றது. இயற்கையில் இதுவோ நல்ல வட்டமாக இருக்கவேண்டிய ஒன்றாகும்.

இந்த தட்டையான குழியின் வழியாக குழந்தையின் உருண்டைத தலை எப்படி உருக்குலையாது வெளிப்படும்? இதனாலேயே பிள்ளை பெறும் வேதனை அதிகமாகுகிறது. ஆபத்துகளும் நேருகின்றன. பின்னமுள்ள குழந்தைகளும் பிரசவமாகின்றன.

இவைகளுக்கெல்லாம் பரிகாரமென்ன? திறந்த வெளியிலே நாம் வாழ்ந்து இயற்கையான பச்சை ஆகாரங்களை உண்டு, நன்றாக உழைத்து, உடைகளை கூடுமான வரையிலும் லேசாக உடுத்தி வரவேண்டும். அப்போதுதான் டாக்டர்கள் வகுப்புக்கு அழிவுண்டு. நாகரிகம் என்ற பதத்திற்கும் அர்த்தமேற்படும்.

* அதிசய எகிப்து

பேரறிஞர்கள் மனதை இன்றும் கலக்கிவரும் எகிப்து எப்போது தோன்றியது? இந்தக் கேள்விக்கு சரித்திரத்தில் பதில் கிடையாது. சுமார் 7000 வருஷங்களுக்கு முன்பே எகிப்து அறிஞர்கள் நிறைந்த ஒரு நாடாக இருந்து வந்தது. இங்கு உள்ள அறிவுக் கதிர்கள் வீசும் புராதனச் சின்னங்கள் இன்றைய நாகரிகத்தைப் பார்த்து கேலி செய்கின்றன. இங்கு ஞானிகள் வாழ்ந்தார்கள். சக்கிரவர்த்திகளும், சக்கிரவர்த்தினிகளும் வாழ்ந்தார்கள். ராஜ தந்திரிகள் இருந்தார்கள். ஆனல் காலம் தனது பயங்கரமான கையை எகிப்தின்மேல் வைத்துவிட்டது.

நவீன எகிப்தின் தலைநகரமான கெய்ரோ பெரும் புகழும் படைத்த ஒரு அற்புத நகரம். இங்குள்ள மஸ்ஜித்துகள் கணக்கிலடங்கா. முஹம்மது அலியினுடைய சலவைக் கல் மஸ்ஜித்தே மிகவும் கியாதி வாய்ந்தது. அதனது பெரிய கோபுரங்களும், சிறிய சிகரங்களும் கண்களைக் கவரும் தன்மை வாய்ந்தவை.

முஹம்மது அலி மஸ்ஜித்துக்கு அடுத்தபடி மிகவும் ருசிகரமான இடம் எல் ஹஸார் என்பது. இது தான் கெய்ரோ நகரத்து சர்வ கலாசாலை. சென்ற 1000 வருஷங்களாக இது சர்வ கலாசாலையாகவே இருந்து வருகிறது. இஸ்லாம் மத தத்துவங்களே இங்கு பிரதான பாடங்களாக போதிக்கப்படுகின்றன. வாசிக்கும் மாணவர்களோ பன்னீராயிரம் பேர்கள்.

கெய்ரோவில் இன்னும் இரண்டு குறிப்பிடத்தக்க மஸ்ஜித்துகள் இருக்கின்றன. ஒன்றின்பெயர் ஆகா மஸ்ஜித். நீல மஸ்ஜித் என்றே இதை எல்லோரும் அழைக்கின்றனர். மற்றொன்று கெயிர்பெக் மஸ்ஜித். நகரத்தில் அராபியர்கள் வசிக்கும் இடம், ஆகா கெயிர்பெக் மஸ்ஜித்துகள் இருக்கும் இடங்கள், இவைகளே பழைய கெயிரோவின் அழகுக்கு அணிகலன்களாக விளங்குகின்றன.

ஜனசங்கியை அதிகமுள்ள அஹ்மார் வீதியில், கெயிரோவின் மற்றொரு பிரசித்திபெற்ற மஸ்ஜித் இருக்கிறது. இது இரட்டை சிகரங்களைக்கொண்டது. இங்கு இன்று நவீன நாகரிகக் கட்டிடங்களும் இருக்கின்றன. புராதனக் கட்டிடங்களும் இருக்கின்றன. நவீன உடைகளை அணிடவர்களும் உள்ளனர். ஆயிர வருஷத்துக்கு முன்பு என்ன உடை உடுத்தப்பட்டு வந்ததோ, அதே உடையை இன்று உடுப்பவர்களும் இருக்கின்றனர்.

கெய்ரோவின் பொருட் காட்சி சாலையில் உலகத்திலேயே விலை மதிக்கமுடியாத புராதன சாமான்களெல்லாம் சர்வஜாக்கிரதையாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் துதாங்கமன் சமாதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் இங்கு இருக்கின்றன.

சிறிதும் உருக்குலையாதிருக்கும் ஆறாயிரம் வருஷத்துச் சவங்களையும் இங்கு காணலாம்.

1000-வது வருஷத்தில் கெய்ரோ ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பின்னர் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் ஸாலடின் சக்கரவர்த்தி அதை கோட்டை கொத்தளமுள்ள நகரமாக்கினனென்று தெரிய வருகிறது. 1517-ல் அதை துருக்கியர்கள் கைப்பற்றினர். 1798-ல் பிரஞ்சுக்காரர்கள் வசமாகியது கெய்ரோ. பிறகு 1801-வது வருஷத்தில் துருக்கியர்கள் வசமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. 1882-வது வருஷத்தில், அலெக்ஸாண்டிரியா பீரங்கிகளுக்கு இரையான பின்பு, கெய்ரோ பிரிட்டிஷார் வசமாகியது.

உலகத்திலேயே மிகவும் புராதனமான சின்னங்களெல்லாம் எகிப்தில்தான் காணப்படுகின்றன. நைல் நதிக்கரையிலுள்ள கார்ணுக் என்னும் கிராமம் அழிந்துபோன புராதன தெபிஸ் நகரத்தின் வடக்குப் பாதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அழிவுப் பகுதிகள் மூன்று பெரிய இடங்களாக பிரிக்கப்பட்டிருக்கிருக்கின்றன. ஒன்றில் 3-வது அமென்ஹோதெப்பால் கட்டப்பட்டு, 2-வது ரமேஸஸால் மீண்டும் கட்டப்பட்ட மென்து ஆலயத்தின் மிச்சங்கள் இருக்கின்றன. 3-வது அமென்ஹோதப்பால் கட்டப்பட்ட மூட் தேவதையின் ஆலயம் மற்றொன்றில் இருக்கிறது. இன்னொன்றில்தான் உலகத்திலேயே பிரம்மாண்ட ஆலயமான ஆமென் ஆலயம் இலங்குகின்றது.

தூண்களுடைய அற்புதமான ஹால் ஒன்றும் இங்குள்ளது. இது உலகத்தின் அதிசயங்களில் ஒன்று. இது 1-வது செதி, 2-வது ரமேஸஸ் இவர்களால் கட்டப்பட்டது. இந்த தூண்கள் ஒவ்வொன்றும் 65 அடிக்கு

* இக்கட்டுரைக்கென ‘பிளாக்’ செய்யப்பட்ட படங்கள் ‘பிளாரல் டின்ட்டட்’ காகிதங்களில் பிரத்தியேகமாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

மேல் உயரமானவைகள். நவீன என்ஜினியர்களை இந்த ஹால் திகைக்க வைத்துக் கொண்டிருக்கிறது. இதில் செய்யப்பட்டிருக்கும் வேலைப்பாடுகளே எகிப்தின் கலா ஞானத்திற்கு அழியாத சாட்சியாய் மிளிர்கின்றன.

கெய்ரோவின் பொருள் விளங்காச் சின்னம் (Sphinx) உலகத்தின் மிகமிகப் பழமையான சின்னங்களில் ஒன்று. இது 190 அடி நீளமுள்ள ஒரு பாறை. மனிதத் தலையுடன், பதுங்கிக் கிடக்கும் சிங்கத்தைப்போன்ற உருவத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது. இது அனேகமாய், எகிப்தின் அப்போதைய சூரியக் கடவுளாகிய, ஹார்மாசிஸ்ஸைக் குறிப்பதாக இருக்கலாமென்பதே ஆராய்ச்சிக்காரர்களது முடிவு.

"பொருள்விளங்காச் சின்னத்தின் விடுகதை"க்குப் பதில் சொல்லவேண்டுமானால், போயிஷியாவிலுள்ள ஸ்பிங்ஸ் சின்னத்தைக் கொண்டே நிர்ணயிக்கவேண்டும். அங்கு "4 கால்களுள்ளதும், 3 கால்களுள்ளதும், 2 கால்களுள்ளதும் என்ன?" என்ற புதிர் அப்போது போடப்பட்டது. அதற்கு ஒடபேஸ் என்பவன் 'அது மனிதன்' என்று பதிலளித்தான். குழந்தையாயிருக்கும்போது நாலு கால்களால் தவழ்கிறதென்றும், பின்னர் 2 கால்களால் நடக்கிறானென்றும், கிழப்பருவத்தில் மூன்றாவதை (கம்பு) ஆதாரவாகக் கொண்டு, அதை ஊன்றிய வண்ணமாய் நடக்கிறானென்றும் சொல்லப்பட்டது.

கிஜெயிலுள்ள மஹா பிரமிட்டு மிகவும் கியாதி வாய்ந்தது. பரோக்களை சமாதிவைக்கும் இடம். இதனது அடிப்பரப்பு 13 ஏகர்கள்கொண்டது. இரண்டு பெரிய கற்பாறைகளால் இது சதுர அளவில் ஆரம்பிக்கப்பட்டு, ஊசியின் குவிந்த முனைமாதிரி செய்யப்பட்டுள்ளது. இதில் அந்தக் காலத்திய ராஜர்க்கள், ராணிகள் இவர்களின் சவங்கள் புதைக்கப்பட்டுள்ளன. இதற்குள்போகும் பாதைகளும் அடியோடு மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பிரமிட்டு சுமார் 6000 வருஷத்தியவை என்று ஆராய்ச்சிகாரர்கள் கணக்கிடுகிறார்கள்.

நைல் நதிதான் எகிப்தின் ஜீவ ரத்தம். நைலின் டெல்டாவில் அமைந்துள்ள எல் மார்க் கிராமத்தினருக்கு நைல் நதிதான் எல்லாவற்றிற்கும் பயன்படுகின்றது. குளிப்பது, குடிப்பது, உடைகள் சுத்தம் செய்வது எல்லாம் இதில்தான்.

இயேசுவின் காலத்தில் அந்தக் கிராமம் எப்படியிருந்ததாகச் சொல்லப் படுகிறதோ, அதேமாதிரிதான் இன்னும் இருக்கிறது. நவீன நாகரிகம் அந்த கிராமத்து மக்கள்மீது தன் கோரக் கையை வைக்கவில்லை. 2000 வருஷங்களுக்குமுன் இருந்ததைப் போலவே அவர்கள் இன்றும் பேசுகிறார்கள்; உடுக்கின்றனர்; நினைக்கின்றனர்.

தெப்ஸில் மெம்மானின் பிரம்மாண்டச்சிலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சிலையும் 65 அடி உயரமுள்ளவை. 3-வது அமென்ஹோதோப் அமைத்தவையே இந்தச் சிலைகள். மெம்மான் ஒரு எதியோப்பியன், ஒரு நீகிரோக் கறுப்பன். ஆனாலும் பேரழகன். 3-வது அமென்ஹொதெப்பின் இந்த சிலைகளில் அவனது பெயர் ஏன் சம்பந்தப்பட்டது என்று மட்டும் தெரியவில்லை.

கி. மு. 27-வது ஆண்டில் இந்த சிலைகளில் ஒன்று பூகம்பத்தால் பழுதடைந்து விட்டது. சரித்திரம் இதைப்பற்றி கூறுகையில் பின்வரும் பதுமையையும் தெரிவிக்கிறது:—"மெம்மான் சிலை! தினந்தோறும் காலையில் எழும் கதிரவனின் கிரணங்கள் இந்த உடைந்த சிலையைத் தாக்கும்போது, அதிலிருந்து பலமான, ஆனால் தெளிவான, இசை நாதங்கள் கிளம்பின. பெரிய யாழின் சப்தத்தைப்போலிருந்தது." ஆனால் அந்தக் காலத்திய மக்கள், மெம்மான் தனது அன்னையான ஈபாஸை ஆரவாரத்துடன் வரவேற்கிறான் என்று எழுதி வைத்திருக்கின்றனர்.

இருநூறு வருஷங்களுக்குப் பின்பு ஸெப்டிமஸ் செவ்ரஸ் இந்த சிலையை மீண்டும் திருத்தி யமைத்தான். அதிலிருந்து இது ஊமையாகிவிட்டதென்று தெரிகிறது. இன்னும் அதன் பக்கத்திலுள்ள சிலைகளிலிருந்து சப்தங்கள் கேட்கின்றன. இவை சூறைக் காற்றின் சப்தத்தை ஒத்திருக்கின்றன. ஆனால் சூரியன் உயரப்போகப்போக இந்த சப்தங்களும் மாறுபடுகின்றன.

எகிப்தின் தெற்கு மாகாணத்திற்கு ஆஸ்வான் தான் தலை நகரம். இங்கு பனை ஓலைகளால் முடையப்பட்ட எல்லா சாமான்களும் விற்கப்படுகின்றன. இவைகளெல்லாம் அதியற்புதமான வேலைப்பாடுகள் அமைந்தவை.

இன்னும் வர்ணப் புல்களால் முடையப்பட்ட சாமான்களிலும் இங்கு வியாபாரம் நடத்துகின்றனர்.

இதோ தயாராகிவிட்டது!

உங்கள் தியேட்டரில் ஆரம்ப

தினத்தை எதிர்பாருங்கள்!!

சந்திர மோஹனா

அல்லது

'சமூகத்தொண்டு'

M. K. ராதா
S. V. வெங்கடராமன்
T. N. மீனாக்ஷி
K. R. ஜெயலக்ஷ்மி
கிளவுன் சுந்தரம்
P. R. மங்களம்
12-வயது H. சங்கரன்
10-வயது பாப்பா
K. P. காமாக்ஷி

ஆகியோர் நடித்த

எமது முதலாவது உன்னத சமூக சீர்திருத்த தமிழ் பேசும் படம்.

நாட்டிய சக்கிரவர்த்தினி

ராகினிதேவியின் டான்ஸ்

அதி அற்புதம்.

டைரெக்ஷன்: ராஜா சந்திர சேகர்

விபரங்களுக்கு: தந்தி:—Movitone

மோஹன் மூவிடோன் கம்பெனி,

157, தெற்கு மாசி வீதி, மதுரை.



ஆப்ரிக்காவில், பெரிய நகரமான கெய்ரோ. முன்னால் இருப்பது
வெண்கல் மசூதி.

கார்னுக்கிலுள்ள சித்திரவேலைப்பாடமைந்த வாயில். கி. மு. 3- வது நூற்ருண்டில் அரசாண்ட 1 - வது ஈருஜிடீவின். காலத்தில் கட்டப் பட்டது.

கார்னுக்கிலுள்ள முதலாவது அமெனேபிஸின் கோயில். இரண்டு பீடங்களுடன் அமெனே பிஸின் சிலை வலது பக்கத்தில் காணப் படுகிறது. இடது பக்கத்தில் ஒஸிரீஸ், மூன்ருவது தூத் மோஸிஸ் இவர்களின் சிலைகள் காணப்படுகின்றன.



'ஸ்பிங்க்ஸ்' — பிரம்மாண்டமான பிரமிட் (சமாதிநிலயம்) இவைகளின் தோற்றங்கள்.

எல் மார்க் கிராமத்திலுள்ள பெரிய வீதி. எகிப்திய மாதர்கள் உடைகளை வெளுக்கின்றனர்.



கெய்ரோவின் வீதிகளில் ஒன்ற. மொவாயாட் மஸ்ஜிதின்
அழகிய இரட்டைக் கோபுரங்கள்.

* பூச்சிகளும் கருவிகளும்

சரித்திர காலத்திற்கு முற்பு மனிதன் தனது கைகளுக்கு உதவியாக இருக்கக் கற்களையும் மரங்களையும் கொண்டு கரடு முரடான கருவிகளைச் செய்தான். தற்போது நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள், முதலியவைகளைச் செய்வதற்குப் பல கருவிகளையும் அவன் உண்டாக்கி வருகிருன். ஆனல் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே, மனிதன் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய சிலந்தி முதலிய பூச்சிகள் இத்தகைய கருவிகளை உபயோகப் படுத்தியிருக்கின்றன.



பூச்சி கருவிகளைச் செய்வதில்லை. அதனுடனேயே அவை பிறக்கின்றன; அல்லது அதனுடனேயே அவை வளருகின்றன. பல்வேறு பூச்சிகளுக்கு எத்தகைய வசதிகளெல்லாம் அளிக்கப் பட்டிருக்கின்றன வென்பதைக் கவனித்தால், அவைகள் எவ்வளவு அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு திறமையாக அவைகள் தங்கள் காரியங்களை நடத்துகின்றன வென்பதைக் கண்டு



சிலந்தியின் இடுக்கிகள்—கொல்லன் கொறடா மட்டும் என்ன ஒஸ்தியோ?

கொள்ளலாம். புராதன மனிதன் கிளிஞ்சல்களைக் கொண்டும், கற்களைக்கொண்டும் செய்யப்பட்ட கரடு முரடான கருவிகளுக்கும் இவைகளுக்கும் சம்பந்தம் கிடையாது. இவைகள் அழகாகவும், ஒரே அளவுள்ளனவாகவும்—அதாவது இன்றுள்ள கருவிகள் மாதிரி—இருக்கின்றன.

உதாரணமாக நாம் சாதாரணமாகப் பார்க்கும் ஒரு சிலந்தியின் தலையையும், 4 கால்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். நமது வீட்டில் கன்னமிடாது நுழைந்துவிடும் பூச்சிகளில் இதுவும் ஒன்று: ஆனல் மடத்தனமாக இரவில் இவைகளில் பல தண்ணீர் அண்டாக்களில் விழுந்துவிட்டு மேலே தப்பித்துக்கொள்ள முடியாமல் தவிப்பதைக் காணலாம். ஆஹா! இது என்ன பயங்கரமான பூச்சி! நெருக்கமாக உள்ள அதன் எட்டுக் கண்களைக் கவனியுங்கள். பின்னர் அதன் அமைப்பைக் கவனித்தால், நவீன காலத்திய கொறடா கவனம் உங்களுக்கு வருதில்லையா? மனிதன் செய்த கொறடாவைவிட இவை பயங்கரமானவை. ஏனெனில் இவைகள் வஸ்துக்களை கெட்டியாக மட்டும் பிடித்துக் கொள்வதில்லை; பள்ளமாக வுள்ள இவை விஷக் கலயங்களாகவும் இருக்கின்றன. இவைகள் மூலமாக தங்களிடம் அகப்பட்டுக்கொண்ட இதர பூச்சிகள் உடலில் விஷத்தைச் செலுத்துகின்றன.

மற்றொரு தந்திரத்தையும் கையாளுகிறது சிலந்தி. இந்தத் தந்திரம் அதற்கு மிகவும் அவசியமானது. அதனது பின்னங் கால்களில், மென்மையான சீப்புக் காம்புகள் இருக்கின்றன. நாம் உபயோகிக்கும் சீப்பையே இவைகள் ஒத்திருக்கின்றன. பசை நிறைந்த பைகளிலிருந்து நூலை வெளிப்படுத்தி அந்த நூல்களை ஒழுங்குபடுத்துவதற்கு இதை உபயோகப்படுத்துகின்றன. தவிரவும் நூல் வலையில் ஏதாவது வேறு பூச்சி விழுந்துவிட்டால்

---

* கட்டுரையும் படங்களும் ஆங்கிலத்திலிருந்து களவாடப்பட்டவை. பளாக்குகள் மட்டுமே சொந்தம்.

வலையைச் சுருக்கி அதைத் தப்பியோட முடியாதபடி செய்து விடுவதும் இந்த சீப்புக் கருவியே.

படத்தில் அகலமான இரட்டைக் கொக்கி தேனியின் கால் நகங்கள். அதனுடனிருக்கும் போட்டோவுடன் அதை ஒப்பிட்டுப்பாருங்கள். சாதாரணமாக படகுக் கொக்கியுடன் அது ஒத்திருப்பதைக் காணலாம். இந்தக் கருவிகளின் சக்தியை நாம் உணர்ந்து விட்டோமானால் அப்புறம் தேனீ இலைகளின் கீழ் தலைகீழாக நடப்பது, மழ மழ வென்றுள்ள கூரை, கண்ணாடி இவைகளிலும் நடப்பது ஆகியவைகள் நமக்கு அதிசயமாகவே தோன்று.

சிலந்தியின் பாதத்தில் இரண்டு சீப்புகள் இருக்கின்றன. அது நூற்ற நூலை இவைகளைக்கொண்டுதான் ஒழுங்குபடுத்துகிறது.





தேனீயால் ஒருவன் கொட்டப்படுகையில் தேனீயை அப்புறப்படுத்துவது எவ்வளவு கஷ்டமாகயிருக்கிறதென்பதைக் காணலாம். அதன் கோரமான கொடுக்கு சதையில் ஆழமாகப் பதிவதனால் இப்படி நேர்வதில்லை; ஆனால் இரட்டைக் படகுக்கொக்கிகளைப் போலுள்ள நகங்களினால் சதையை கோபத்துடன் அது பிடித்துக் கொண்டிருப்பதே காரணம். கொட்டப்படாது இதைப் பரீக்ஷைபார்க்க வேண்டுமானால், ஒரு தேனீயை உங்கள் விரல்மீது ஊர்ந்து செல்ல விடுங்கள். அப்போது அது நடக்கையில் ஒவ்வொரு அடிக்கும் அந்த சிறிய கொக்கிகள் சதையைப் பிடிப்பதும், விடுவதுமாக இருப்பதைக் காணலாம். கடுமையாகத்தூண்டப்பட்டாலொழிய தேனீக்கள் கொட்டுவதில்லை.



வெட்டுக்கிளியின் கருப்பை—சக்கிலியின் கருவி இதனுடன் போட்டி போட முடியுமா?

தேனீயின் நாக்கும் அலட்சியமாக அப்பால்தள்ளிவிடகூடிய கருவியல்ல. தேனைச் சேகரிக்க மலர்களின் ஜீவனுக்குள் துருக்கப்படுகிறது இந்த நாக்கு. நல்ல நீளமாயும், மயிர்கள் அடர்ந்தும் உள்ள இது தேன் துளிகள் ஒன்றையும் விடாமல் சேகரித்துக் கொள்ளக்கூடியவாறு அமைத்திருக்கின்றது. வீட்டில் 'சிம்னி' துடைப்பது, புட்டி சுத்தம் செய்வது ஆகியவற்றைப் போலவே இதுவும் தனது நாக்கை மலரில் விட்டு இப்படியும் அப்படியும் துழாவி இருக்கும் தேனையெல்லாம்



குளவியின் சினைப்பை-இதனால் மரத்தில் துளைபோட்டு ஆழத்தில் முட்டைக ளிடும்; ஆகருக்கும் இதற்கும் ஏதாவது வித்தியாச மிருக்கிறதா?







மலரினுள் துழாவி தேனைச் சேகரிக்கும் தேனீயின் நாக்கு—கீழே இருப்பது—'புட்டி' சுத்தம் செய்யும் பிரஷ்—இரண்டும் ஒத்திருப்பதைக் காண்க.

சேகரித்து விடுவதைக்காணலாம். குளவி (பெண் பூச்சி)யின் முட்டை வைக்கும் கருவி, குத்துவாளைப் போல் உள்ளது; அல்லது 'ஆகரை'ப்போல் இருக்கிறது. இதை அது பூமிக்குள் அழுத்துகிறது. அந்த பத்திரமாக முட்டைகளை வைக்கின்றது. இதேமாதிரிதான் வெட்டுக்கிளியும் சக்கிலியின் கருவியைப்போலுள்ளது இதன் சினைப்பை.

துளை செய்து முட்டையிடும் கருவிகளையுடைய பல பூச்சிகள் இருக்கின்றன. இவைகளில் பல கெட்டியான மரத்தையும் துளை செய்யும் சக்திபெற்றவை.

பிள்ளைப்பூச்சி மிகவும் பயங்கரமான பூச்சிகளில் ஒன்று. வளைந்த முன்னங் கால்களைக் கவனியுங்கள். முதலில் அவைகளைக் கொண்டு அதுமேலே அடித்துப், பின்னர் கீழே இறக்குகின்றன. அதாவது பாக்கு வெட்டி மாதிரி. ஒரு எதிரி மட்டும் அகப்பட்டுக் கொண்டால் அது அதைப் பாக்கு வெட்டி மாதிரி பிடித்துக் கொள்ளும். அப்போது தப்பித்துக்கொண்டு போவதே துர்லபம். இவைகளுக்கு மாம்சங்களின்மீது ரொம்பவும் பிரியம். உயிரோடு பிற பூச்சிகளையும், புழுக்களையும் பிடித்து மெதுவாக அவைகளை விழுங்குவதே இவைகள் வழக்கம். படத்தில் அதன் தலையும், முன்னங்கால்களும் பெரிதாகக் காட்டப் பட்டிருக்கின்றன. அரம்போன்ற பற்கள் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளத் தக்கவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, இந்த இயற்கையான பாக்கு வெட்டி பூச்சி உலகத்திலேயே மிகவும் கோரமான ஒரு ஆயுதமாகும்.

இவைகள் பச்சை இலைகளிலும், மண்ணிலும் தான் வாழுகின்றன. இவைகள் நிறமும், இவைகள் வசிக்கும் பொருட்களும் ஒரு வர்ணமுடையவை. பறவைகள் இவைகளைக் கொத்தித்தின்ன முடிவதில்லை. அதேசமயம், தங்களண்டையில் வரும் இதர பூச்சிகளை 'டக்' கென்று பிடித்துக்கொண்டு இவைகள் கபளீகரம் செய்து விடும். இவைகள் மணிக்கணக்கில் அமைதியாக, அசையாமல் உட்கார்ந்திருக்கும். ஒரு பூச்சி எட்டுந் தூரத்தில் வந்ததும், அதன் முன்னங்கால்கள் திடீரென்று அதிரும்; பாக்கு

வெட்டிகளும் விஸ்தரிக்கும்; இடையில் அவைகள் மீண்டும் சுருங்கிவிடும். அப்போது அகப்பட்டுக்கொண்ட பூச்சி பல மற்று அதற்கு பலியாகின்றது.



பிள்ளைப்பூச்சியின் பயங்கரமான உறுப்பு— பாக்குவெட்டியின் பிடிப்பிலிருந்தாவது பாக்கு விழுந்து விடலாம்— இதன் பிடிப்பிலிருந்து எதுவும் விலகாது.



தேனீயின் பின்னங் கால்களிலிருக்கும் நகங்கள். படகுக் கொக்கி மனிதன் செய்தது.

இன்னம் 'சுள்ளாணிகள், இஞ்ஜக்ஷன் குழாய்கள், ஊசிகள், தறியில் ஓடும் பாவகள், துடுப்புகள், கத்திரிக்கோல்கள், சாவணம், மண்வெட்டி, வளையங்கள் ஆகியவற்றை ஒத்த உறுப்புகளையுடைய பூச்சிகளுக்கும் கணக்கில்லை.

இவைகளையெல்லாம் யோசிக்கும்போது மனிதன் இயற்கையைத்தான் 'காபி' அடித்தானோ வென்ற சந்தேகம் ஏற்படுகிறது. கொல்லன், தச்சன், சிற்பி, கல்யுக மனிதர்கள் இவர்களனைவருக்கும் இந்தப்பூச்சிகள் தாம் கருவிகளைச் செய்ய கற்றுக் கொடுத்தன என்று யாராவது ஒரு விஞ்ஞானி கூறினால், அதை மறுத்துப் பேசுவதற்கு யாருக்கு தைரியமுண்டு?

இதேமாதிரி பறவைகளிடத்திலிருந்தும் மனிதன் 'ஏரோப்பிளேன்', வாத்துகளிடத்திலிருந்து சப்பல், மீன்களிடத்திலிருந்து 'சப்மரைன்' (நீர் மூழுகிக் கப்பல்) 'முத்துக் குளிக்கும் சருவி' முதலியவைகளைக் நண்டுபிடித்தானென்றே சொல்லவேண்டும்.

ஆண்டவன் படைப்பில் இம்மாதிரி அதிசயங்களுக்கு எல்லையேது? அவனது சக்தி மனித மூளைக்கு எட்டாதது. ஒவ்வொரு பொருளிலும் அவனது பூரணமான கைவேலை காணப்படுகின்றது. அறிவற்ற விஞ்ஞானிகள் இதை இயற்கை என்று கூறலாம். ஆனால் இந்த இயற்கையின் அழகை அவர்கள் விஞ்ஞானம் சிருஷ்டிப்பதில்லை. ஏதோ ஒன்றுதான் சிருஷ்டிக்கின்றது. அந்த ஒன்று கடவுளாயிருந்தாலும் சரி, வேறு எதுவாயிருந்தாலும் சரி, அது சொல்ல முடி முடியாத வல்லமைபுடையது என்பது மட்டும் நிச்சயம்.

அந்த வல்லமையை மனிதன் தலை வணங்குவதில் அவமானம் ஒன்றும் கிடையாது. இதைத்தான் சக்தி வணக்கம் என்கிறோம். முட்டாள் சயன்ஸ்காரர்களோ சிரிக்கிறார்கள்!

பொறுக்கி எடுத்த நடிகர், அலசி எடுத்த நீதி,

தேர்ந்தெடுத்த பாட்டு

சம்சார நௌகா

வில் தான்

தெளிவான ஒலி, மேலான படப்பிடிப்பு, திகட்
டாத சம்பாஷணை, தேர்ந்த டைரெக்டர்
அடங்கியது

சம்சார நௌகாவில் தான்

கதைப்போக்கு, காலத்தின் சிறப்பு, காதநிகளின்
ஜோடிப்பு, எல்லாம் அழகாக அமைந்தது

சம்சார நௌகாவில் தான்

கன்னட பாஷை பேசும் படம்

படம் தயாரிப்பவர் :

தேவி பிலிம்ஸ் லிமிடெட்,

45, தங்கசாலை வீதி, மதராஸ்.

: : சிரிப்பு : :

[ஸ்ரீ பி. நவநீதம் நாயுடு]

தனது 'பீட்'டில் நின்றுகொண்டிருந்தான் ஒரு போலீஸ்காரன். அந்த சமயம் பழம் விற்பவன் ஒருவன் தன் தட்டிலிருந்து ஒரு வாழைப்பழத்தோலை எடுத்து கீழே எறிந்துவிட்டு மேலே நடந்தான். அப்போது அந்த வழியாக 'புஷ்' வண்டியைத் தள்ளிவந்தவன் பழத்தோலின்மீது காலை வைத்தான். வைத்தது தான் தாமதம்! 'சர்'ர்ர்ர்... என்று வழுக்கியது. அவனும், வண்டியும், அதிலிருந்த பிரம்மாண்ட மனிதனும், கீழே உருண்டார்கள். அதைக் கண்டதும் போலீஸ்காரன் 'கக்கட'வென்று நகைக்க ஆரம்பித்தான். 'ஓ' வென்று நகைத்தான். முகத்தில் ரத்தம் குபீரென் றேறியது. அரைமணி நேரத்திற்கு மேல் அவன் நகைத்துக்கொண்டேயிருந்தான். பின்னர் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மூளையில் அதிக ரத்தம் ஏறிவிட்டதால், அவன் மாண்டு போய்விட்டான்.

இதுமாதிரி காரணத்தால் ஒவ்வொரு வருஷமும் மரணமடைபவர்கள் பலர். இவர்களைச் சிரிப்பு கொன்றுவிடவில்லை; ஆனால் அதை அடைக்கியாள முடியாமற் போனதே இவர்கள் மரணத்திற்குக் காரணம். போலீஸ்காரன் அளவுக்கு மிஞ்சி சிரித்ததினாலேயே மரண மடைந்தான்.

தாராளமான, சுத்தமான, கட்டுப்பாடற்ற சிரிப்பே உலகத்தின் ஒப்பற்ற 'டானிக்'. இது மனித உடலுக்கு மிகவும் விரைவில் சுகமளிக்கிறது.

நகைப்பு அவனை சுகப்படுத்துகிறது. அது அவனை யுவனாகவே வைத்திருக்கிறது. அது அவனை எதற்கும் தகுதியுடையவனாகவே செய்கிறது.

* * *

எஸ்கிமோக்கள் யுத்தகாலங்களில் சமாதானப் பேச்சுகள் நடத்துவதாயிருந்தால், 'சிரிப்பை' வரவழைக்கின்றனர். அன்னியத் தலைவர்கள் அவர்களைச் சந்திக்கும்போது ஹாஸ்ய நாடகங்கள் நடித்துக் காண்பிக்கப்படுகின்றன. அப்போது அவர்கள் மனதாற சிரித்துவிட்டால் சிநேகபாவம் உடனே ஏற்பட்டு விடுகிறது.

இதே கொள்கையில்தான், நாம்வேலைசெய்கிறோம். ஒருவரிடம் நம்மை நமது நண்பர் அறிமுகம் செய்து வைக்கும்போது நாம் புன்னகை செய்கிறோம். அந்த மூன்றாவது மனிதரும் புன்னகை செய்கிறார்.

பின்னர் சிரிக்கவேண்டி நாம் ஏதாவது தமாஷாகச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறோம்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில்கூட, 'வியாதியஸ்தர்கள்' சாதாரணமாக சிரிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டால், மீண்டும் அவர்கள் சமூகத்தில் சேர்ந்து வாழத் தகுதியான நிலைமையை அடைந்து விட்டார்கள் என்றுதான் அர்த்தம்.

இரத்தம் மிகவும் குறைவாக இருக்கும்போது நகைப்பு அதை அதிகப்படுத்துகிறது. அதே மாதிரி இரத்த ஓட்டத்தை சிரிப்பு வேகமாக்குகிறது. விசேஷமாக மூளையிலுள்ள 'புழுக்கத்தை' விலக்குகிறது. நுரையீரல்களைப் பலப்படுத்துகிறது.

(1) அவன் நகைப்பின் மூலமாக செய்தி தெரிவிக்கப்படுகிறது.

(2) உற்சாகத்தை உண்டாக்க ஒரு சக்தியாக உபயோகிக்கப்படுகிறது.

(3) வெற்றியின் வெளிப்பாடு நகைப்பு.

சுமார் 45வது நாளில்தான் முதல் தடவையாக நீ சிரித்தாய்; அப்போது உனக்கு ஹாஸ்ய உணர்ச்சி இருந்ததால் நீ சிரித்தாய் என்று சொல்லவில்லை. ஆனால் நீ சுகமாய் இருப்பதை உனது தாய்க்கு அறிவிக்கும்பொருட்டே சிரித்தாய். அதற்கு முன்னும் அதாவது 4-வது நாளிலிருந்தும் நீ சிரித்து வந்ததுண்டு. ஆனால் அதற்கெல்லாம் காரணம் காட்டமுடியாது.

உண்மையான சிரிப்பு 110-வது நாள் வரையிலும் நிகழ்வதில்லை. கிளு கிளுப்புச் செய்வதே முதலில் சிரிப்புக்கு பெரிதும் தூண்டுதலாயிருக்கிறது. ஆனால் ஈ எறும்பு இவைகளும் இந்த 'கிளு கிளுப்பு' உணர்ச்சியை உண்டாக்கலாம். ஆனால் நீ ஆத்திரம் கொண்டு அவைகளை அடித்துக் கொன்றுவிடலாம், தமாஷாக, கேலியாக, உன் சர்மத்தின்மீது பிறர் கைவிழும்போதுதான் நீ சிரிக்கிறாய்.

அடுத்தபடியாக நன்றாகப் பழகின முகத்தைக் காணும்போதும் சிரிப்பு தானாகவே ஏற்படுகிறது.

பிரகாசமான வர்ணங்களும், சாதாரண சங்கீதமும்,

குழந்தைகளுக்கு சிரிப்பை வருவிக்கும் சக்திவாய்ந்த வைகள். இவைகளால் காட்டு மிராண்டிகளும், எளிமை மனதுடையவர்களும் சிரிப்பார்கள். காரணம் அவைகள் சுலபமாக உணர்ந்து கொள்ளப்படுகின்றன, சுலபமாக உணரப்படும் எதுவும் நமக்கு குதூகலத்தை விளைவிக்கின்றன. இந்த உண்மை குழந்தைப் பருவத்தில் மட்டுமல்ல; வாழ்க்கை முழுவதும் பொருந்துவதும் கண்கூடு.

பிறரை சிரிக்க வைக்கும் நபர்கள் தங்கள் ஜீவிய முழுவதும் சிரித்துக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்துக்கொள்வது பெருந் தவறு. "ஹாஸ்யமாக எழுதும் எழுத்தாளர்களும், ஹாஸ்யமாகப் பேசுபவர்களும், நடிப்பவர்களும் என்றும் வாழ்க்கையில் இன்பத்தோடு இருந்ததில்லை; அவர்கள் கண்களுக்கு உலகத்தின் துன்பம் தான் அதிகமாய்ப் படுகிறது" என்று கூறுகின்றனர் பெரிய மனோதத்துவ சாஸ்திரிகள் இதற்கு உதாரணங்களாக டிக்கன்ஸ், ஷா, வோட் ஹவுஸ்: சார்லி சாப்ளின் முதலிய வர்கள் வாழ்க்கைகளைக் குறிப்பிடலாம். சாப்ளின் வாழ்க்கையில் புன்னகையைக் காண்பது மிகவும் கஷ்டம்.

ஹாஸ்ய ரஸத்தை அநுபவிப்பதன் மேல் சிரிப்பது நாளடைவில் உண்டாகுமே ஒழிய, திடீரென்று உண்டாகாது. அவன் அறிவாளி, நாம் அவனைவிட குறைந்த அறிவுள்ளவன்' என்ற நிலையை உண்டாக்கிக் கொள்ளும்போதுதான் ஹாஸ்ய ரஸத்தினால் சிரிக்கிறோம்.

சிரிப்பு தினந்தோறும் நூற்றுக்கணக்கான வழிகளில் உபயோகமாகிறது. ஆனால் வாழ்க்கையில் சிரிப்பென்பதையே அறியாத—மரக் கட்டைகளும் உண்டு. சிரிப்பது அந்தஸ்துக்குக் குறைவு என்று கருதி முகத்தை 'இஞ்சி தின்ற ஹனுமார்' மாதிரி வைத்துக்கொண்டிருக்கும் கனவான்களும் அனேகர். இன்றைய தினம் சிரிப்பு உங்களிடையிலுள்ள பல பிரச்சினைகளைத் தீர்த்துவிடும். காதலை நகைப்பு அபிவிருத்தி செய்யும். துன்பத்தை இன்பமயமாக்கும். சோர்வைப் போக்கி சுருசுருப்பை அளிக்கும். உடலின் தேஜஸை அதிகப்படுத்தும்.

பண்டங்களை விற்பதிலும் சிரிப்பு வேண்டும்; வாங்குவதிலும் சிரிப்பு வேண்டும். சிரித்துகொண்டே 'இரண்டு காசு' அதிகமாக உங்களிடம் சில வியாபாரிகள் தட்டி விடுவார்கள். அதே மாதிரி சிரிப்பினால் மயக்கி 'இரண்டு காசு' குறைத்துக்கொண்டு பொருட்களையும் அதிகமாக வாங்குபவர்களும் நபர்களும் உண்டு.

சிரிப்பினால் முன்பின் தெரியாத பேர்வழியிடம் நட்பு உண்டாக்கிக் கொள்ளலாம். பேச்சுக்கு முன்னதாக பாதையை சீர்படுத்தி வைப்பது நகைப்பு.

பெற்றோர்களையும், குழந்தைகளையும் பிணிப்பதும் சிரிப்புதான். ஆனால் தங்கள் குழந்தைகள் தமாஷ்களைக் கண்டு எத்தனை பெற்றோர்கள் இருக்கிறார்கள்? தங்கள் பெற்றோர்கள் நகைப்பதை எத்தனை குழந்தைகள் காண்கின்றன. இதெல்லாம் வேறு விஷயம்.

புதுமாப்பிள்ளைகளுக்கு மட்டுமே ஒரு ரகசியம். உங்கள் மாமியார்கள் வீடுகளில் முகத்தை 'விளக்கெண்ணெய் சாப்பிட்டவன்' போல் வைத்துக் கொள்ளாமல் புன்னகையுடன் வைத்துக்கொள்ளுங்கள். அதுவும் உங்கள் மாமியார்களைக் காணும் போது புன்னகையைச் சற்று அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். நிச்சயமாய் லாபமுண்டு.

செய்துதான் பாருங்களேன். நீங்களே ஆச்சர்யப்படுவீர்கள்.

மொத்தத்தில் சிரிப்பு உங்களை மனித தத்துவத்தின் போக்கை அதிகமாக உணரச்செய்யும்.

மன்னர்களின் சோர்வைப் போக்கவும், சுகத்தை விருத்தி செய்யவுமே சமஸ்தானங்களில் ஹாஸ்ய நபர்கள் இருந்து வந்தனர்.

ஆனால் சிரிப்பில் அளவு இருக்க வேண்டும். சில வேளை இந்த அதிக சிரிப்பால் உயிருக்கு ஹானி ஏற்பட்டுவிடும். ஒரு வகையில் இவை அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். பித்தக் கொள்ளி என்ற பெயருமிடப்பட்டு பைத்தியக்கார ஆஸ்பத்ரியில் வாசம் செய்யும் பாக்கியத்தைவிட இறந்து போவது அதிர்ஷ்டம் தானே!

கொஞ்ச நாட்களாய் பத்திரிகைகளில் அடிபடும் பாலஸ்தீனத்தில் ஒரு அதிசயம். இது நேற்று, உண்டானதல்ல. சுமார் எழுநூறு ஆண்டுகளாக இருக்கிறது. சாக்கடலின் (Dead Sea) தென் கோடியில் ஒரு உப்புமலை உண்டு. இந்த மலை 6 மைல் நீளம், 3 மைல் அகலம், 1000 அடி உயரம்.

* * *

விக்டோரியா கிராஸ் முதல் முதலில் (ராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படும் பெரிய மரியாதை) 1856-வது வருஷம், ஜனவரி 29உ ராணி விக்டோரியாவால் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது கிரிமியா யுத்தம் முடிவடையும் தருணத்தில். ஸபாஸ்டபூலில் கைப்பற்றப்பட்ட ருஷ்ய பீரங்கிகளிலிருக்கும் உலோகத்தைக் கொண்டே இந்த மெடல்கள் தயாரிக்கப்படுகின்றன.

"எம். எச்." பரிமள & அசல்

பட்டணம் பொடி

குணம், மணம், காரம், நிறம் இவைகள் ஒருங்கே அமைந்த "எம். எச்." பரிமளம் & அசல் பட்டணம் பொடியை வாங்கி உபயோகியுங்கள். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் இதன் அருமை நன்கு விளங்கும். விலை சரசமாயும் சரக்கு நல்லதாகவும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

அநேக தங்க மெடல்கள்பரிசு பெற்ற

கே. முஹம்மது உசேன்சாயபு

டெலிபோன் 4.84.

தொழிற்சாலை:—

நெ. 48, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெருவு, ஜி. டி. மதராஸ்.

தபால் பெட்டி 135.

எல்லோருக்கும்

ஆரோக்கியத்தைக் கொடுக்கக் கூடியது.

எங்களின் "ஜே" மிஸ்கி

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்

அலெக்ஸாண்ட்ரா டானிலோவா —
பிரபல ருஷ்ய நாட்டியக்காரி

க்ளாடெட் கோல்பர்ட்

[ஸ்ரீமதி. எஸ். கமலவேணி]

இக்கட்டுரை எழுதிய ஸ்ரீமதி. எஸ். கமலவேணி (வயது 16) தமிழ்ச் சினிமா உலகத்தில் ஒரு சிறந்த நடிகை. 'பிரபாத்' கம்பெனியில் முதல் முதலில் தயாரிக்கப்பட்ட தமிழ் 'சீதா கல்யாண'த்தில் இவர் கைகேயியாக நடித்தது ரஸிகர்களுக்குப் பெரு விருந்தாக யிருந்தது. இவரது ஆங்கில பாஷா ஞானத்திற்கும் இந்தக் கட்டுரையே சாட்சி சொல்கின்றது.

—ஆசிரியன்.

ஹாலிவட்டில் அவள் ஒரு அழகு 'மயில்'. புன்னகை பொங்கி வழியும் அதரங்கள் அவளது அழகுக்கு அழகு செய்தன. குறும்புநிறைந்த அவள் கண்கள் எல்லாவற்றையும் நொடியில் மயக்கும். கட்டு வாய்ந்த அவள் உடல் வனப்பும் அங்கங்களில் அலைமோதும் ஒளியும், களங்கமில்லாத முகமும், கவலையற்ற உள்ளமும், கலங்காத சித்தமும், கலகலவென்ற நகைப்பும் அவளுக்கு மேனாட்டு சினிமா உலகத்தில் ஒரு அழகு ராணிப் பட்டத்தைக் சூட்டி விட்டன. அந்த 'ராணி' தான் க்ளாடெட் கோல்பர்ட் (Claudette Colbert)

முதலில், 'நாணல் கோணல்' காட்டி, இரண்டாவது 'நட்பு, காதல்' காட்டி, மூன்றாவது 'நஞ்சு' காட்டும் ஹாலிவுட் பெண்கள் கோஷ்டியில் சேர்ந்தவளல்ல க்ளாடெட் கோல்பர்ட். எல்லோருடன் அவள் தாராளமாய்ப் பழகினாலும், அதில் ஒரு எச்சரிப்பும், கடுமையும், இருக்கும். வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப்' பேசுவது தான் அவள் வழக்கம். ஆண்கள் விரிக்கும் காம வலைகளில் சிக்காது ஆதிக்கம் செலுத்துவதிலும் அவள் 'கைகாரி' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீமதி. கமலவேணியின் மூன்று விதமான தோற்றங்கள்

உண்மையான அழகு பிறரை அவ்வளவாக கவர்ச்சி செய்வதில்லை; கூர்ந்த கண்களே அந்த அழகைரஸித்து ஆனந்த வெள்ளத்தில் திளைக்கும் என்பது ஒரு அறிஞனது வார்த்தைகள். அதன்படி க்ளாடெட்டிட முள்ள உண்மையான அழகு நல்ல அழகு, ரஸிகர்களையே கவர்ந்திழுக்கும் என்பதும் குறிப்பிட வேண்டிய அம்சம்.

1914-வது ஆண்டில், செப்டம்பர் மாதம் 13உ க்ளாடெட். சாசோயின் (Mr. and Mrs. Chauc-hoin) தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தையாக

ஜனித்தாள் அவள். லிலி என்ற அழகான பெயரும் அவளுக்கு சூட்டப்பட்டது. சோயின் தம்பதிகளின் ஸ்ரீமந்த புத்திரனுன தாமஸும், லிலியும் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்தார்கள்.

அப்போது தாமஸுக்கு வயது 5, லிலிக்கு வயது 4. ஒரு நாள் அந்த இரண்டு குழந்தைகளும் மாடிமீது மடமட வென்று ஏறி, மூலையிலுள்ள ஒரு அறையில் நுழைந்தன. அந்த அறையோ, நெடுங்காலமாக

பள்ளிக்கூடத்தில் லிலி



லிலிப் பாப்பா

11-வது வயதில்

உபயோகிக்கப் படாமலிருந்து வந்தது. மரப் பலகைகளெல்லாம் முறிந்து கிடந்தன. திடீரென்று குழந்தைகள் நுழைந்த வேகத்தில் பலகைகள் முறிந்து விழுந்தன. விழுந்த சப்தத்தைக் கேட்டு ஸ்ரீமதி சாசோயினும், வேலைக்காரியும் ஓடிவந்து பார்த்தபோது அந்தப் பையன் அழுதுகொண்டிருந்தான். லிலியோ முறிந்த பலகைக் குவியலிடையில் நின்றுகொண்டு அவனைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தாள். அதோடுமட்டும் நிற்கவில்லை, "மம்மா! (அம்மா) விழுவது தமாஷாய்த்தானிருக்கிறது; இவன் என்ன இவ்வளவு பயங் கொள்ளியாயிருக்கிறுனே" என்ற பேச்சுக்களும் அவளது வாயினின்று எழுந்தன. அவளது தாயார் லிலியை நன்ருகக் கவனித்தபோது அவளது காலிலும், கையிலும் ஏற்பட்டிருந்த சிராய்ச்சல் காயங்களிலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. ஆனல் அதை அவள் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

குழந்தையாயிருந்தபோதே அவளிடம் சிரிக்கும் குணம் குடிகொண்டுவிட்டது. அவளது 7 வயது முழுவதும் தனது பெயரை நினைத்துக்கொண்டு சிரிப்பதில் அவளுக்கு ஒரு தமாஷ். அவளது 6-வது வயதில் ஒரு சம்பவம். அவள் அப்போது பரீ (Paris) நகரத்திலிருந்த தனது பெற்ருேர்களுடனிருந்தாள். கிறிஸ்துமஸ்தினம் வந்துவிட்டது. பிரான்ஸ் முழுவதும் ஒரே களியாட்டத்தில் மூழ்கிக் கிடந்தது. கட்டுக்கடங்காத லிலிக் குழந்தையோ, ஜனக் கூட்டத்தில் தவறிவிட்டாள்.

அவள் பெற்ருேர்களோ திடுக்கிட்டனர். போலீசாரிடம் புகார் செய்தனர். போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் தகவல் கொடுக்கப்பட்டது.....................

அப்போது ஒரு டஜன் பெண்கள் போலீஸ் 'இலாக்கா'ப்பில் இருந்து வருவதாகவும், அவர்களது பெற்ருேர்கள் இன்னுர்களென்று தெரியவில்லையென்றும், அவர்கள் வரும் வரையில் குழந்தைகளை அங்கேயே வைத்துக்கொண்டிருக்கப் போவதாகவும் பதில்வந்தது.

"எல்லாம் தங்கள் அம்மாக்களை நினைத்துக் கொண்டு அழுகின்றன." என்று கூறினர் ஒரு மாஜிஸ்டிரேட்.

"எல்லாக் குழந்தைகளுமா?" என்று கேட்டார்கள் சோயின் தம்பதிகள்.

"ஆமாம்" என்ருர் மாஜிஸ்டிரேட்.

"அப்படியானுல் எங்கள் குழந்தை அவர்களிடையில் இல்லை. சின்ன பெண்; சிரித்துக்கொண்டேயிருப்பாள்; அவளைக் கண்டுபிடியுங்கள்" என்று கூறிவிட்டனர் அந்தத் தம்பதிகள்.

பின்னர் தேடியதில் ஒரு சூதாடுமிடத்திற்கு சமீபத்தில் லிலி படுத்துக்கொண்டு சுகமாக ர் ; ரெ
யி

விருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சாதாரணமான உள்ளத்தை மிரட்டும் சுநட்டை மீசையுடைய போலீஸ்காரன் ஒருவன் லிலி முதுகில் ஒரு அறை வைத்தான். சோம்பல் முறிந்து சொகுசாக எழுந்தாள் லிலி. 'வா, ஜெயிலுக்கு'. என்றான் போலீஸ்காரன்



இன்றைய க்ளாடெட்

ஹி ஹி ஹி......என்று சிரித்துக்கொண்டே ஒரே பாய்ச்சலில் கம்பி நீட்ட ஆரம்பித்தாள் லிலி. என்ன இருந்தாலும் குழந்தைப் பெண்தானே! நாலு தாண்டில் அவள் போலீஸ்காரன் வசமாகி விட்டாள்...... அப்போதும் அவள் அழவில்லை......பின்னர் பெற்றோர் வசம் ஒப்படைக்கப்பட்டாள்.

மஹா யுத்தம் முடிந்து விட்டது. வர்த்தகத்திலும் யுத்தத்தின் விளைவு கைவைத்து விட்டது. லிலியின் குடும்பத்திலிருந்த செல்வம் நிமிஷத்தில் கரைந்து போயிற்று. ஆனாலும் அவர்கள் சமாளித்து வந்தனர். முடிவில் அமெரிக்காவில் குடியேறினர் லிலியின் பெற்றோர்கள். அதாவது தனது 13-வயதில் லிலி, நியூயார்க் (New York) நகரத்தின் வாழ்வைக் காண ஆரம்பித்தாள். வாஷிங்டன் இர்விங் ஹை ஸ்கூலில் அவள் கல்வி பயின்றாள். பள்ளிக்கூடத்தில் படித்தவரையில் லிலி ஒரு சினிமாகூட பார்த்தது கிடையாது. பள்ளிக்கூடத்திலிருந்து விலகுவதற்கு முந்திய வருஷத்தில்தான் ஒரு நாடகத்தைப் பார்க்க லிலிக்கு பிராப்தமிருந்தது. தங்களது பெண்ணின்மீது சோயின் தம்பதிகள்வைத்த கண்ணோட்டம் இவ்வளவு அவ்வளவு அல்ல. 17-வயதுக்குப் பின்னரே அவள் நாட்டியத்தைப் பார்த்தாள்.

இந்த மாதிரி கட்டுப்பாடுகளை சாதாரணமாக பல பெண்கள் எதிர்த்தே வந்திருப்பார்கள். ஆனால் லிலிக்கு தனது பெற்றோர்களிடத்திலிருந்த அன்பும், நம்பிக்கையும் அபாரமானவை. விசேஷமாக தாயிடம் அவளுக்கு பெரிய காதல், இன்றுகூட, லிலி சாசோயின் (க்ளாடெட் கோல்பர்ட் என்பது சினிமாவில் சேர்ந்த பின்பு சூட்டிக்கொண்டபெயர்) தனது தாயாருடனேயே வசித்து வருகிறாள். இந்த வயதிலும் மகளின் அழகு தாயின் முகத்திலும் விளங்குகிறது.

பள்ளிக்கூடத்தை விட்டதும் லிலி உடைகள் தைத்து விற்கும் ஒரு பெரிய கடையில் வேலைக்கு அமர்ந்தாள். விற்பதுமட்டும் அவள் வேலையாக இராமல், தைக்கவேண்டிய வேலையும் செய்யவேண்டி இருந்ததால், அவள் விரல்கள் புண்ணாகி விட்டன. இந்த சமயம், பின்வரும் சம்பவமும் நேரவே, அந்த வேலை முற்றுப்பெற்று விட்டது.

ஓர் தினம் அந்தக் கடைக்கு கொழுத்துப்போய் குதிர் மாதிரியிருந்த ஒரு ஸ்திரீ கவுன்வாங்க வந்தாள். அவளிடம், கடையிலிருந்த பெண்கள் மாதிரிக்காக பல கவுன்களைப் புரட்டிக் காண்பித்துக்

16-வயதில் தோற்றம்

கொண்டேயிருந்தனர். அப்போது திடீரென்று லிலியின் வெண்கலச் சிரிப்பு பின்புற அறையிலிருந்து கேட்டது.

"இவளுக்கு கவுன் நமது கடையிலேதது? அளவெடுத்துக்கொண்டு அனுப்புங்கள். நாளைக்குத் தைக்

துக் கொடுத்து விடலாம். யானைகளுக்கு 'ரெடிமேட்' கவுன்கள் எந்தக் கடையில் விற்கிறார்கள்?'' என்று க்ளாடெட் தனது தோழி பெண்களுடன் கூறி, சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் கூறிய அந்த வார்த்தைகள் அவ்வளவும் கவுன் வாங்கவந்த ஸ்திரியின் காதுகளில் ஸ்பஷ்டமாய்க் கேட்டன. அவ்வளவு தான் தாமதம்! முகம் சுண்டிப்போய், 'விர்'ரென்று கடையை விட்டு வெளி தாண்டிவிட்டாள் அவள்.

அவள் சென்ற ஒரு மணி நேரத்திற்கெல்லாம் க்ளாடெட்டின் கையில் 'டிஸ்மிஸ்' 'ஆர்டர்' கொடுக்கப்பட்டது. க்ளாடெட்டும் சந்தோஷமாய் வீடு வந்து சேர்ந்தாள்.

பின்னர் அவள் சித்திரக் கல்வி பயில ஆரம்பித்தாள்.

இந்த சமயம் அவள் ஒரு ஹோட்டலுக்குச் சென்றிருந்த போது, எதிர்பாராத வகையில் அவளுக்கு ஆனி மோரிஸன் என்னும் பிரசித்திபெற்ற நாடகாசிரியையின் நட்பு ஏற்பட்டது. அப்போதுதான் அவள் எழுதிய "ஓயில்ட் வெட்ஸ்காட்ஸ்" என்னும் நாடகம் மேடை மீது நடிப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. தமாஷாக தனக்கு ஒரு சின்ன வேடம் கொடுக்கும்படி ஸ்ரீமதி மோரிஸனைக்கேட்டாள் லிலி. ஆனால் தமாஷென்று கருதாத ஆசிரியையோ அப்படியே ஆகட்டுமென்று கூறி விட்டாள். அன்றுதான் அவள் அதிர்ஷ்ட சக்கிரம் சுழலத் தொடங்கியது. 1924-வருஷத்தில், கிறிஸ்துமஸ் தினத்தன்று அவள் நாடக மேடைமீது ஒரு சில்லரை வேடத்தில் தோன்றினாள். அவள் 3 அடிகளே பேசினாள். ஆனால் அவைகளை அவள் உச்சரித்த போக்கை கிரிட்டிக்குகள் பிரமாதப் படுத்தினர். தனது வாழ்க்கையின் வெற்றி நடிப்பில் இருக்கிறது என்பதை அன்றிரவே உணர்ந்து கொண்டாள் லிலி. பின்னர் இந்த நாடகம் நடந்த 6 மாத காலமும் அதில் பல வேடங்களைத் தாங்கி நடித்தாள் லிலி.

பிறகு பிராட்வேயிலுள்ள (சென்னை பிராட்வேயல்ல; நியூ யார்க் பிராட்வே) பிரபல நாடக கம்பெனி சொந்தக்காரியாகிய பிராக் பெம்பர்ட்டினிடம் லிலி சென்று தன்னை அந்தக் கம்பெனியில் வேலைக்கு வைத்துக்கொள்ளுமாறு கேட்டாள். தியேட்டர் சொந்தக்காரர்களை மயக்குவது கடினம். அவர்கள் 'குள்ளநரிக் கூட்டங்கள்'. ஆனால் எங்கு சாமர்த்தியம் புதைந்து கிடைக்கிறது; அதைப் பயன்படுத்தி பணம் குவிப்பது எப்படி என்ற இரண்டு விஷயங்களை அறிவதில் மட்டும் அவர்கள் நிபுணர்கள். அதன்படி பெம்பர்டன் அவளை வேலைக்கு எடுத்துக் கொண்டான். 'தி மேரியனட்மேன்' என்ற நாடகத்தில் அவள் கதாநாயகி வேடம் பூண்டாள். இதிலிருந்து அவள் பிரதம வேடங்களையே தாங்கி வரலானாள்.



ஹீரோவின் மனைவி வேஷத்தில்

இந்த சமயம் சினிமா உலகத்திலும் அவளுக்கு அழைப்பு வந்தது. 'டாக்கிகள்' அப்போது வதந்தியாகவே இருந்தன. முதல்முதலில் அவள் நியூயார்க் ஸ்டுடியோ ஒன்றில், "மைக்கின் காதல்" என்ற மௌனப் படத்தில் நடித்தாள். இது அவளுக்குப்பிடிக்கவில்லை, "உடலை அடிக்கடி இப்படி மாற்றிக்கொள்வது பெருத்த தொல்லையாயிருக்கிறது; சார்! நாடகமே எனக்குப்போதும்'' என்று மானேஜரிடம் சொல்லிவிட்டு, மீண்டும் நாடகத்தில் சேர்ந்து விட்டாள் லிலி.

அப்போது 'தி பார்க்கர்' என்ற நாடகத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டாள் க்ளாடெட். முதல் நாள் ஒத்திகையில் கதாநாயகனாக நடிக்கப்போகும் ஒரு யுவகன் அவளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டான். இருவர் கண்களும் ஒன்றாயின; கருத்து

கள் கணத்தில் இணைந்தன. அந்த யுவசனது பெயர் நார்மன் போஸ்டர். (Norman Post) அந்த இரண்டு இளம் வயதினர்களிடையிலும் காதல் தோன்றியது. அந்த நாடகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு அடுத்த நாளில் இருவரும் நியூ யார்க் நகர ஹாலில் சந்தடியின்றி சர்வ சடங்குகளுடனும் கலியாணம் செய்து கொண்டனர்.

க்ளாடெட் இதைப்பற்றி ஒரு பத்திரிகை நிருபரிடம் பேசிக் கொண்டிருக்கையில் அவள் பின்வருமாறு குறிப்பிட்டாள்:—

'பணம் என்றைக்கும் கிடைக்கும். இளமை அந்த மாதிரி 'என்றும் கிடைக்கும் சாமான் ஜாப்தா'வில் சேர்ந்ததல்ல. பல பெண்கள் தங்கள் இளம் வயதில் கலியாணம் செய்து கொள்ளாதிருப்பது ஒரு கோரமான விஷயம். பொருள் முடையில் சிலருக்கு யுக்த வயதில் கலியாணமாவதில்லை; கலியாணம் தங்கள் சுதந்திரத்தை அழித்துவிடுமென்று சில 'காளை'ப் பெண்கள் கருதுகின்றனர். கலியாணம் செய்து கொண்டு இன்பத்தில் புரளுவதற்கே இளமைதான் தக்க பருவம். பருவகாலத்தைப் பாழாக்கிவிட்ட பின்பு, பணமும், புகழும் இன்பத்தை அளிக்கமுடியுமா?'

ஒரு சாதாரண மானிடப்பெண் என்றமுறையில் இப்படிச் சொல்லியிருக்கிறாள் க்ளாடெட். சிற்க.

இந்த ரகசிய விவாகம் அம்பலத்துக்கு வந்ததும் கோல்பார்ட்டின் தாயார் திடுக்கிட்டு விட்டாள். ஆனால் மகள் மேல் கொண்டிருந்த அன்பு இந்தத் தவறை சில நாட்களில் மறக்கடித்து விட்டது.

அப்போதுதான் டாக்கியும் ஆரம்பமாயிற்று. ஒருவருக்கொருவர் எந்தக் கட்டுப்பாட்டாலும் பிணிக்கப் படலாகாது என்பதும் விவாக ஒப்பந்தங்களில் ஒன்று. ஆகவே நார்மன் போஸ்டர் ஹாலிவுட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

க்ளாடெட்டோ நியூ யார்க் தியேடர்களில் நடித்து வந்தாள். இப்படியிருக்கையில், லாங் ஐலண்டிலுள்ள பாரமவுண்ட் கம்பெனியின் கிழக்கு ஸ்டுடியோக்களில்



''ஒரு இரவில் அது நேர்ந்தது''
என்ற படத்தில் கதாநாயகியாக

தயாரிக்கப்பட்ட ''சுவற்றில் துவாரம்'' என்ற படத்தில் லிலி ஒரு வேடத்தை ஏற்று நடித்தாள். ஆனால் இந்த சமயம் அவளுக்கு அது அளவற்ற இன்பத்தைக் கொடுத்தது. பின்னர் உண்டான ஆவலில் ''தி லேடி லைஸ்' என்ற படத்தில் ஒரு வேடத்தில் தோன்றினாள். பகலெல்லாம் காமிரா முன்பு நடித்தாள். இரவில் நாடகமேடைமீது நடித்தாள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அதன்மீது அவளுக்கு பாரமவுண்ட் கம்பெனியுடன் 'நீண்ட ஒப்பந்தம்' கிடைத்துவிட்டது. 'பிக் பாண்ட்' (Big Pond) என்ற படத்தில், மாரிஸ் ஷிவேலியருக்கு எதிராக, அவளுக்கு கதாநாயகிவேஷம்கொடுக்கப்பட்டது. இந்த படமே உலகத்துக்கு முதல் முதலாக க்ளாடெட் கோல்பர்ட்டை விளம்பரப்படுத்தியது. பின்னர் 'சிரிக்கும் லெப்டினெண்ட் என்ற படத்திலும் அவள் ஷிவலியருடன்நடித்தாள். அவளுடன் நடிப்பதென்றால் ஷிவலியருக்கு பரம குஷி. அதற்குப் பின், கணவனும் மனைவியும் சேர்ந்து நடிக்கவேண்டுமென்று ஓர் ஆசை இருவருள்ளத்திலும் ஏற்பட்டது. அதன் பயனாகவே, 'மன்ஹாட்டனின் மனிதன்' என்ற படம் தயாரிக்கப்பட்டது. அதில் கோல்பர்ட் கதாநாயகியாகவும், நார்மன் போஸ்டர் கதாநாயகனும் காட்சி யளித்தனர்.

அந்தப் படம் ஒரே படியாக யாவர் மனதையும் கவர்ந்துவிட்டது. நியூ யார்க் பத்திரிகைகளில் கோல்பர்ட்டின் படங்களும் செய்திகளும் பக்கம் பக்கமாக பலவித வர்ணங்களில் வெளியாகின. அதற்குமேல் அவளுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. பின்னர் அவள் பிரடெரிக் மார்ச்சுடன் 'முன்லாடர்' என்ற படத்தில் நடித்தாள். பிரடரிக் மார்ச்சுடன் இந்தத் தொடர்பு பின்னர் 'சிலுவையின் குறியில்' அவளுக்கு ஏற்பட்டது.

இந்த படம் முடிந்தும், அவள் ஒரு தனது கணவனுடன் சிறிய படகில் உலகப்பிரயாணம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். அப்போது அவர்கள் வாழ்க்

கையில் பல அம்சங்களை அநுபவித்தனர்; நல்ல ஓய்வும் கிடைத்தது.

மீண்டும் அவள் படக்காட்சி யுலகத்திற்குத் திரும்பினாள். 'காதலர்களிடையில் கௌரவம்' "ஒரு காரியதரிசியின் ரகசியங்கள்" "அவனது ஸ்திரி" "புத்திசாலிப் பெண்" "நேற்றையதினத்து மனிதன்" "தவறான வழியிற் செலுத்தும் மாது" முதலிய படங்களில் அவள் நடித்தாள்.

இந்த தருணத்தில் தான் க்ளாடெட் ஹாலிவுட்டில் போனதும் அவள் உழைப்பு அதிகமாகிவிட்டது.

இனி சாதாரண சின்னஞ்சிறு பெண்ணாக நடிப்பதில் ஜனங்களைக் கவர முடியாதென்ற விஷயமும் அவளுக்குத் தெரிய ஆரம்பித்தது. என்ன செய்வது என்று யோசித்திருக்கையில், செஸில் பி. டி மில்லும் தாம் தயாரிக்கும் 'சிலுவையின் குறியி'ல் நீரோவின் மனைவி வேடத்திற்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தார். தனக்கு அந்த வேடத்தைத் தரும்படி க்ளாடெட் அவரைக் கெஞ்சினாள். அத்தகைய பிரம்மாண்டமான ஒரு பாத்திரத்தை இந்த இளம் பெண் நடிப்பாளா வென்று நிர்வாகிகள் நினைத்தனர். ஆனால் புதைந்து கிடக்கும் சக்தியை நிமிஷத்தில் கண்டுகொள்ளும் ஞானமுள்ள செஸில் பி. டி. மில் 'சரி' யென்று சொல்லிவிட்டார். இதைப் பற்றி ஸ்ரீ. செஸில் பி. டி. மில்ஸ் பின்னர் குறிப்பிடுகையில், "அவள் கண்களை நான் முதலில் சந்தித்தபோது, அவைகளில் கவிதைகள் மிதப்பதைக் கண்டேன். அவளது வாயின் வனப்பும், ஓசையின் இன்பமும் என்னைப் பரவசப் படுத்தின. மேலும் அவளது கண்களில் நூற்றாண்டுகளின் ஆழம் உருளுகின்றது. அவளை சரியானபடி உபயோகப் படுத்தினால், உலகத்தை ஸ்தம்பிக்கச் செய்து விடலாம் என்னும் எண்ணம் என் மனதில் உறுதியாக ஏற்பட்டுவிட்டது" என்று கூறினார்.

'சிலுவையின் குறி' தயாரிக்கப்பட்டபோது, அவள், அதே சமயம் பாரமவுண்டில் தயாரிக்கப்பட்ட "மாயத் தலைவர்" என்ற படத்திலும் நடிக்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் ரோமானிய சக்கிரவர்த்தினியாகவும் மற்றொரு நாள் சாதாரண நவீன மாதாகவும் நடித்து வந்தாள் கோல்பர்ட்.

'சிலுவையின் குறி'யும் வெளிவந்து விட்டது. அது எப்படி வரவேற்கப்பட்டதென்பதை வர்ணிப்பது அனாவசியமான வேலை. டி மில்ஸ்ஸே திகைத்துப் போய் விட்டார். 'நீரோ'வாக நடித்த சார்லஸ் லாப்டனின் அபார நடிப்புத் திறமையும் இதில் தான் வெளிப்பட்டது. அதன் பின்னர் மில்ஸ் தாம் அடுத்து தயாரித்த "4 பயமுறுத்தப்பட்ட மனிதர்கள்" "கிளியோபாத்ரா" ஆகிய இரண்டு படங்களிலும் பிரதம வேடங்களை மனமுவந்து கோல்பர்ட்டுக்கு அளித்தார்.

"பயமுறுத்தப்பட்ட நான்கு மனிதர்கள்" படம் தயாரிக்கப்படுகையில், பெரும் பகுதி ஹாவாயில் எடுக்கப்பட்டது. அங்கு கப்பல் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவளுக்கு ராஜப்பிளவு கண்டுவிட்டது. ஆப்ரேஷன் அவசியம் என்றும், 3 வாரங்கள் கட்டாயம் ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கூறிவிட்டனர். டி மில்லுக்கோ சங்கடமாகிவிட்டது. கோல்பர்ட்டும் கலங்கினாள். தன்னை முன்னணிக்குக் கொண்டுவந்த டி. மில்லுக்கு ஏமாற்ற மளிக்கக் கூடாதென்பதற்காக அவள் கடவுளுடன் போராடினாள். டாக்டர்கள் சொன்னதையும் கேளாது ஆபரேஷன் செய்த நான்காம் நாளே படுக்கையினின்று எழுந்து அறையில் உலாவ ஆரம்பித்தாள். ஏழாம் நாள் அவள் ஹாவாயிக்கு மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பத் தயாராகிவிட்டாள். இந்த நிலையில் அவள் மேற்படி பயங்கரமான படத்தில் வெற்றிகரமாக நடித்தது ஒரு அதிசயம் என்றே டாக்டர்கள் ஏகோபித்துச் சொல்கின்றனர்.

சமீபத்தில்—அதாவது ஒரு வருஷத்திற்கு முந்தி 'மெருகிட்ட லிலி'யில் நடித்தபோது, அவளுக்கு தொடையில் ஒரு பெரிய ரத்தக் கட்டி கண்டு விட்டது. படுக்கையிலேயே இருக்கவேண்டும் என்று டாக்டர் 'கட்டளை' யிட்டார். ஆனால் படப்பிடிப்பு தற்காலிகமாக நின்றுவிடும்; அப்போது 'எக்ஸ்டிராக்கள்' உடனே தள்ளப்பட்டு விடுவார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க சில வாரங்களாவது செல்லும்; அதுவரையிம் அவர்கள் குடும்பம் என்னாவது? என்பவைகளைப் பற்றி க்ளாடெட் யோசிக்க ஆரம்பித்துவிட்டாள். முடிவு என்ன? உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அந்தப் படத்தில் அவள் நடித்தே தீர்த்து விட்டாள்.

பின்னரே கிளார்க் கேபிளுடன், 'ஒரு இரவில் அது நேர்ந்தது' என்ற படத்தில் நடித்தாள் க்ளாடெட். இதுதான் அவளுக்கு என்றுமழியாப் புகழை உண்டாக்கிவிட்டது. 1934-வது வருஷத்தில் படக்காட்சி யுலகில், சிறந்த நடிகன் கிளார்க் கேபிள்—சிறந்த நடிகை க்ளாடெட் கோல்பர்ட் என்று கூறி, சலனப் படக் சழகத்தார் பொற் சில

களை இருவருக்கும் வழங்கினார்கள்.

இந்தச் சிலை அவருக்குக் கிடைத்தபோது ஒரு சம்பவம்...... அவள் அன்று நியூ யார்க்குக்கு கிளம்பத் தயாராகிவிட்டாள். திடீரென்று டெலிபோன் மணி 'கணகண' வென்று அடித்தது. 'ஹாலிவுட்டில்' ஒரு விருந்து என்றும் அவசியம் வரவேண்டும் என்றும், டிமில் குரல் கூறியது. விருந்தைக் கவனித்து ரயிலேறி விடலாமென்பது அவளது நினைவு. விருந்து ரகசியமும் அவளுக்குத் தெரியாது. ஹாலிவுட்டுக்குப் போனால், அங்கு ஹாலில் ஏராளமான பிரமுகர்களும், பத்திரிகாசிரியர்களும் நடிகர்களும், டைரக்டர்களும் உட்கார்ந்திருந்தனர். மேற்படி சலனப் படக்கலைக் கழகத்தார் அவளை வரவேற்று, அவளைப் புகழ்ந்து அவளிடம் பொன் பதுமையை நீட்டினார்கள். கரகோஷம் வானிலும் எதிரொலித்தது. எதிர்ப்பாராது கிடைத்த இந்தப் புகழினால் அவள் விம்மி விம்மி (ஆனந்தத்தால்) அழுதாள். பேச முடியவில்லை...... ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினாள்...... அற்கப்புறம் விருந்திலிருந்து மறைந்து நியூ யார்க்குக்குப் போய்விட்டாள்.

பின்னர் விதி குறுக்கிட்டது. நார்மன் போஸ்டருடன் அவள் விவாகரத்து செய்து கொண்டாள். 'இந்த விவாகரத்து சாமான்யமானதல்ல; எனது இருதயத்தின் இரத்த ஓட்டம் இந்த சமயத்தில் உருகி ஓடும் இருக்ம்பு குழம்பாக இருக்கிறது; ஆனால் வேறு வழியில்லை' என்று கோல்பர்ட் கூறுகிறாள். மேற்கொண்டு இந்தத் திடீர் முறிவுக்கு ஒரு காரணமும் தெரியவில்லை.

பின்னர் 'தனிப்பட்ட உலகங்கள், 'தனது எஜமானனை அவள் கலியாணம் செய்து கொண்டாள்'' என்ற படங்களில் அவள் நடித்தாள்.

அவள் கடைசியாக நடித்த படம் 'கலியாணப் பெண் வீடு திரும்புகிறாள்' என்பது.

* * *

'சிலுவையின்குறி' படத்தில் நடிப்பதற்கு முன்பு அவள் தனது கால்களை காமிராவுக்கு காட்டினதே கிடையாது. இதைப்பற்றி கிரிட்டிக்குகள் பன்முறை அவளைக் கேலி செய்ததுமுண்டு. ஆனால் 'சிலுவையின் குறி'யில் அவள் தனது அங்கங்கள் பூராவையும் ஒரு அளவில் காமிராவுக்குக் காண்பிக்க வேண்டி நேர்ந்துவிட்டது. இதைப்பற்றி அவள் சொல்கையில், ''காலம் கொள்கைகளையும், வைராக்கியத்தையும் பொடியாக்குகின்றது. கூறினாள். காலம் என்னை பூரண நிர்வாணமாக நடிக்கச் செய்யாதுஎன்றும் என்னால் சொல்லமுடியவில்லை'' என்று. தளரா முயற்சியினாலும், இடையறா உழைப்பினாலும் க்ளாடெட் கோல்பர்ட் இந்த நிலைக்கு வந்திருக்கிறாள் என்பது நன்கு உணர வேண்டிய உண்மை. ஹாலிவுட்டில் அவள் தனக்குக் கொடுக்கப்படும் வேஷங்களை மிகவும் நன்றாக ஆராய்ந்து, அதற்கேற்றபடி நடிப்பதில் மிகுந்த சிரத்தையும் அவளுக்குண்டு. நடிக்கையில் ஒப்பவென்பதையே அவள் விரும்பினது கிடையாது.

* * *

கோல்பர்ட்டின் வாழ்க்கை முள் நிறைந்ததாகக் காணப்பட்டாலும், அவள் தனது நிலை கலங்கா உள்ளத்தினால் அதை ஒரு ரோஜா மெத்தையாக மாற்றிவிட்டாள். அவளது திடச் சித்தமும், கட்டான உடலும், கறையிலாக்கண்களும், நம் நாட்டு நடிகைகளுக்கு இருந்தால் முன்னணிக்கு ஏன் வர முடியாது?

'மேரிபனட் மேன்' முடிந்ததும், க்ளாடெட் ஜெஸ்ஸி போன்ஸ்டெல் என்ற மற்றொரு நாடக முதலாளியிடம் சென்று வேலை கேட்டாள். அப்போது அவர் பக்கத்திலிருந்த ஸ்ரீமதி போன்ஸ்டெல் உனக்கு சம்பளம் எவ்வளவு வேண்டும்.'' என்று கேட்டாள்.

''வாரத்திற்கு 200 டாலர்கள் வேண்டும்'' என்று 'பதிலளித்தாள் லிலி.

அப்போது ஸ்ரீமதி. போன்ஸ்டெல் இரண்டு கைகளையும் மோதிச் சிரித்தாள். ''வாரத்திற்கு இங்கு எல்லாருக்கும் 35லிருந்து 40 டாலர்களே இங்கு சம்பளம். நீ அழகாய்த்தானிருக்கிறாய். ஆனால் நீ கேட்கும் சம்பளம் கொடுக்க முடியாது'' என்று கூறிவிட்டாள். லிலியும் திரும்பி விட்டாள்.

ஆனபோதிலும் இரண்டு வாரங்களுக்கெல்லாம் ஸ்ரீமதி. போன்ஸ்டெலிடமிருந்து டெலிபோன் மூலமாக லிலிக்கு அழைப்பு வந்தது. வாரத்திற்கு 50 டாலர்கள் சம்பளம். அந்தக் கம்பெனியில் சேர்ந்து, ஒரு 'டாக்ஸியில் முத்தம்'' முதலிய நாடகங்களில் நடித்தாள் லிலி.

பின்னர் 'குற்றம்' என்ற நாடகத்தில் நடிக்குமாறு கட்டளை பிறந்தது லிலிக்கு. லிலியோ அதை மறுத்து விட்டாள். செல்வின்னின் கம்பெனியில் பார்க்கர் (Barker) நாடகத்தில் தான் நடிக்க விரும்புவதாகவும், 'குற்றம்' என்பதில் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள பகுதி நல்லதல்ல வென்றும் கூறினாள்.

''சரி! உனக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது. இது சாதாரண பாத்திரமல்ல...... உன்னை ஒரு நக்ஷத்திரமாக்கிவிடும்... போ! போ!...... பார்க்கரில்தான் ஆடு!... ஊர் பேர் தெரியாத ஒரு பெண்ணுக்கு எனது

நாடகத்தில் முதன்மை ஸ்தான மளித்து அவளை கீர்த்தி வாய்ந்தவளாக்கிவிடுகிறேன்'' என்று ஆத்திரத்துடன் மொழிந்தார் ஸ்டேஜ் டைரக்டர் ஊட்ஸ்.

அப்படியே லிலியும் பார்க்கரில் நடித்தாள்.

'குற்றத்தில்' நடித்த அந்த முன்பின் தெரியாத பெண் அப்போது தான் பிரசித்திபெற்றவளானாள். அவள் தான் ஸில்வியா ஸிட்னி.

க்ளாடெட்டும் அவளது அன்னையும்

1901-வது வருஷத்தில்; உடா, உப்பேரி நகத்தில் 14 இளைஞர்கள், "பெண் த்வேஷிகள்" என்ற சங்கமொன்றை ஸ்தாபித்தனர். அவர்கள் பத்து பேர்கள் சமீபத்தில் மீண்டும் ஒன்று சேர்ந்து தமாஷா நடத்தினார்கள். ஆனால் அப்போது ஒரு ரஸமான விஷயம்! அவர்களைவரும் தங்களுக்கு கலியாணமாய் விட்டிருப்பதைக் கண்டார்கள்.

* * *

பல்வேறுபட்ட 50 குரங்குகள் ஹாலிவுட்டிலுள்ள மே வெஸ்ட் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டன. இவைகளை அவர் தான் நடிக்கப்போகும் அடுத்த படத்தில் உபயோகப்படுத்தப் போகிறாளாம். "குரங்குகளை ஹாலிவுட் ஆஸாமிகள் சரியாக காப்பியடிக்கிறார்களா என்பதைப் பார்க்கவே இவைகளை வரவழைத்திருக்கிறேன்'' என்கிறாள் மே வெஸ்ட்.

* * *

புல்லில் 4,500 தினுசுக ளிருக்கின்றன.

* * *

மாஸ்கோ (ரஷ்யா) பொதுஜன வாசக சாலையில், 6,500,000 புஸ்தகங்களிருக்கின்றன.

* * *

வருஷத்திற்கு 19,000,000 டன்கள் காகிதம் செலவழிகிறது. அமெரிக்கா மட்டும் இதில் நூற்றுக்கு 10 டன் விகிதம் காகிதத்தை செலவழிக்கிறது.

* * *

மஹா யுத்த காலத்திலிருந்து 70 குருட்டு மாணவர்கள் லண்டன் சர்வ கலாசாலையில் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

உலகத்திலுள்ள பட்சிகளெல்லாவற்றையும் அழித்துவிட்டால், பூரா உலகமும் 5 வருஷங்களில் பூச்சிகளால் விழுங்கப்பட்டு விடுமென்று சொல்லப் படுகிறது.

* * *

இங்கிலாந்தில் உண்மையில் முதல் முதலாக பாங்கர்களாக இருந்து தொழில் நடத்தி வந்தது குல்செட் அண்டு கம்பெனி. இந்த கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்பட்ட தென்பதற்கு தஸ்தாவேஜு ஒன்றும் கிடையாது. ஆனால் 1560-வது வருஷத்திலும் அது தொழில் நடத்தி வந்தது. இன்னும் இந்தக் கம்பெனி தொழில் நடத்துகிறது.

* * *

ஒவ்வொரு நாளும் நம்மில் ஒவ்வொருவரும் சுமார் 35 பவுண்டு காற்றை ஸ்வாசிக்கிறார்கள்.

* * *

ஒரு சிட்டுக்குருவி நியூயார்க் நகரத்திலுள்ள ஹம்ஸ்டெட்டில் ஹீத் வீதியில் இறங்கியது. திடீரென்று ஒரு பூனை அதன்மீது பாய்ந்தது.

அப்போது எதிர் பாராது கனவேகத்தில் வந்த ஒரு மோட்டார் லாரி இரண்டையும் கொன்று விட்டது. சம்பவம் நடந்தது சென்ற மாதத்தில்.

* * *

முதல் மோட்டார் வண்டி ஒரு சிறு வண்டி. 3 சக்கிரங்கள் கொண்டது. 2 பேர்களையே ஏற்றிச் செல்லக்கூடியது. மணிக்கு $2\frac{1}{2}$ மைல் வேகம். 1770 வது வருஷத்தில், கக்நாட் என்ற பிரஞ்சுக்காரால் இந்த வண்டி தயார் செய்யப்பட்டது. நீராவியின் மூலமாகவே இது ஓட்டப்பட்டு வந்தது. 1854-வது வருஷத்தில் தான் காஸோலின் இஞ்ஜின் தோன்றியது.



தெப்விலுள்ள மெம்மாளின் பிரம்மாண்டமான சிலைகள். ஒவ்வொன்றும் 65 அடி உயரமுள்ளவை. இரண்டில் சமீபத்திலிருப்பதுதான் ரோமானியர் காலத்தில், விடியற் காலையில் நாதங்களை இசைத்தது.



கெய்ரோவின் மஜ்ஜித்துக்கால் முக்கியமானவை. முதலில்
இருப்பது கெய்ப்பெக் மஜ்ஸித். பின்னு
விருப்பது ஆகா மஜ்ஸித்.

முகப்புப் படம்

—

ஆன் சோதர்ன் என்னும் சினிமா நடிகை.



அஸுரப். மார்க்கெட் இங்குதான் எல்லா சாமான்களும் விற்கப்படுகின்றன.

சூரிய ஸ்நானத்தில் திளைத்து நிற்கும் ஒரு வெள்ளைப் பெண்

:: சந்திரனின் அற்பு

[ஸ்ரீ. எம். கிருஷ்ணராஜு]

தலைமயிர் வளராது குட்டையாக இருக்கும் நபர்களில் நீங்கள் ஒருவரா? அல்லது ஒரே யடியாக பத்து நாளைக்குள் காடுமாதிரி மயிர் வளரும் பேர்வழிகளில் ஒருவரா? உங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள புஷ்பங்களும், பழங்களும், காய்கறிகளும் ஏன் நன்முக வளரமாட்டேனென்கிறது? அடுத்த வீட்டுச் சிறிய தோட்டத்தில் அவ்வளவு செழிப்பாக அவைகள் வளர்வானேன்? இதற்கு பல காரணங்களிருக்கலாம். ஆனல் சந்திரன் அந்த காரணங்களில் முக்கியமானது என்பதை மட்டும் நீங்கள் மறக்கக்கூடாது.

“ஹம்பக்”...... என்று நீங்கள் சொல்வது என் காதில் விழுகிறது! ஆனல் உண்மையென்னமோ நான் சொன்னதுதான்.

ஒரு செம்படவனைப் போய் விஷயத்தைக் கேட்டுப் பாருங்கள். சாதாரண நாட்களில் பிடிப்பதைவிட பௌர்ணமியன்று இரட்டிப்பு மடங்கு மீன் பிடிக்கிருன். ‘ஏன்’ என்று அவன் காரணம் சொல்ல மாட்டான். “அது வயக்கங்கோ”, என்று சொல்லிவிட்டு வாய்மூடிக் கொள்வான்.

நமது மூதாதையர்களெல்லாம் சந்திரனின் அதிர்ஷ்டமான நிலைகள் ஏற்படும் தினங்களிலேயே தங்கள் தானியங்களை விளைத்தனர். இப்போது 6 ஏக்கரில் கிடைத்த நெல் அப்போது ஒரு ஏக்கரில் கிடைத்தது? இன்னும் இந்த மாதிரி கிடைக்கிறது. இந்த உண்மையைக் கண்டு நவீன நிபுணர்கள் திகைக்கின்றனர்? எப்படி இது ஏற்படுகிறது என்பது அவர்களுக்குத் தெரியமாட்டேனென்கிறது.

சந்திரனும் அதில் ஒரு பங்கு எடுத்துக்கொள்கிறது என்று அவர்களுக்குத் தெரியும் வரையில் அதைப்பற்றிய உண்மையை அவர்கள் உணரமுடியாது.

சந்திரனைப்பற்றிய விசேஷங்களை ஆப்ரிக்கக்காடுகளில் வசிக்கும் காட்டுமிராண்டி சூனியக்கார வைத்தியர்கள் நன்கு அறிவார்கள். வருஷத்தில் சில இரவுகளில் மட்டுமே அவர்கள் மூலிகைகளைப் பொறுக்குவார்கள். இந்த இரவுகளில் தவிர மற்ற நாட்களில் அந்தச் செடிகளில் ஒரு சக்தியும் கிடையாதென்பது அவர்களுக்கு நன்கு தெரியும். நமது வைத்திய சாஸ்திரங்களும் இதற்கு தக்க உதாரணங்களாக விளங்குகின்றன.

உண்மை என்னமோ இதுதான்! விஞ்ஞானி நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலு...
இதற்குக் காரணம். பௌர்ணமி ...
இடிமழைகளும், புயலும் கா...
விஞ்ஞானிகள் ஆடுகள் மாதிரி விழிக்கி...

ரத்தம் ஓடும் மனித உடலிலும் சந்...
வேலை செய்கிறது. மனிதனது மயிர் வ...
மீது ரத்த ஓட்டத்தின் நிலைமையை நன்கு...
கொள்ளலாம். சந்திரன் பிறைகளுக்கேற்ப...
வளர்ச்சி, அழிவு இவைகளைக் காணலாம்.

ஒரு இளம்பெண்ணுக்கு மயிர் அடர்த்தியாக, ...
மாக, வளரவேண்டுமானல், பௌர்ணமி வரும் ச...
தில் மயிரைச் சற்று கத்தரித்து விடவேண்...
அப்போது மயிர் நன்முக வளர்வதைக் காண... ‘ஸெலூன்களுக்கு’ காசை அதிகமாகக் கொடுக்க விரும்பாத ‘ஜெண்டில் மென்’ அமாவாசை சமயத்தில் மயிரை வெட்டிக் கொண்டால், போதுமானது. மயிர் வளர்வது அடங்கிப் போய்விடும்.

மனித உடலில் ஈரமாக இருக்கும் வஸ்துக்களையெல்லாம் சந்திரனின் சக்தி தொட்டுப் பார்க்கிறது. கபாலத்தில் ஓர்வித திரவத்தில்தான் மனித மூளை மிதந்து கொண்டிருக்கிறது. சிற்சில நபர்களுக்கு பௌர்ணமி நெருங்க நெருங்க ‘மூளை’ தற்காலிகமாக கெட்டுப்போய்விடவே, பித்தர்களாகி விடுகின்றனர். மீண்டும் பௌர்ணமி கழிந்தும் சுய நிலைமை அவர்கள் அடைந்து விடுகின்றனர்.

சமீபத்தில் இது சம்பந்தமாக இரண்டு உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறன. ஐரோப்பாவையும், ஆசியாவையும் பிணிக்கும் கண்டங்களை சந்திரன் ஒவ்வொரு மாதமும் 150 அடி தூரம் பிரத்தியேகமாக நீட்டி, பின்னர் மீண்டும் அவைகளை பழைய நிலைக்கே கொண்டு விடுகிறது—அதாவது இழுத்துக் கொண்டே சந்திரன் போய்விடுமானல், ‘டபார்! என்று பூமி முறிந்துவிடும். கோடிக்கணக்கான பேர்கள் மாண்டு விடுவார்கள். இது ஒரு உண்மை.

இரண்டாவதாக சமீபத்தில் கட்டிமுடிக்கப்பட்ட ‘ராணிமேரி’க் கப்பல், அதன் உச்சியில் சந்திரன் இருக்கையில் 20 பவுண்டுகள் குறைவாக இருக்கின்றது. சந்திரன் விழும் சமயத்தில் எடை அதிகமாக உள்ளது.

நீங்கள் என்று உங்கள் விதைகளை விளைக்கிறீர்

(தொடர்ச்சி 49-ம் பக்கம் பார்க்க)

நாட்டியம்

"தாண்டவன்"

மெல்லெனத் தவழும் மந்தமாருதத்தில் அசையும் மலர்களையும் இலைகளையும் கண்டால் நம் உள்ளம் பரவசமடைகிறது. புயற்காற்றில் மரங்கள் ஆடி அவதிப்படுகையிலும் நம் உள்ளம் கிளர்ச்சி கொள்கிறது. குழந்தையின் கால்களின் மோதலிலே 'குளு குளு'க்காற்றிலே அருவியின் ஓட்டத்திலே மயிலின் ஆட்டத்திலே, மின்னலின் துள்ளலிலே, பாம்புப் படத்தின் அசைவிலே, மனம் பரவசமடைகின்றது. ஆக, அசைவு எப்போதும், மனிதனது ஹிருதயத்தில் ஓர் விதக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இந்த அசைவை பூரணமாக்கினவன் மனிதன். பூரணமாக்கப்பட்ட அசைவே நாட்டியம்.

*　　　*　　　*

மேலே சொன்னது போது. இனி உள்ளே துருவிப்பார்க்கலாம். அவலக்ஷணமான குழந்தை கால் கைகளை அசைப்பதனால் யாரும் இன்பமடைவதில்லை. வான்கோழி ஆட்டத்தினால் எவரும் பரவசமடைவதில்லை. பல்லியின் அசைவினால் பல்லிளிப்பதில்லை. அதேமாதிரி நாட்டியமும் அழகின் அரங்கத்தில் சான்னியத்தியம் செய்யப்படுகையில் தான் இன்பமளிக்கிறது. இதனால் நாட்டியமாடும் அவனுக்கும், அவளுக்கும் அழகு அவசியம்.

நாட்டியமாடும் அவனுக்கும் அவளுக்கும் அக அழகு வேண்டியதில்லை. அங்கங்கள் அழகு இருந்தால் போதுமானது. நாட்டியக்காரர்களின் அங்கங்களில் அழகு சொட்டவேண்டும். அப்போதுதான் நாட்டியத்திலும் அழகு நர்த்தனமிடும்.

*　　　*　　　*

பூங்கொடிபோன்ற உடலும்; மெல்லிய இடையும், வாழைத்தண்டுகள்போன்ற துடைகளும் மோட்டிளம் கொங்கைகளும், ஆமைபோன்ற பறடுகளும், மணி வயறும், கொவ்வை இதழ்களும், குமிழ் புன்சிரிப்பும், நிலவுச் ஜோதி வீசும் பற்களும், ரோஜாக் கன்னக் குமிழ்களும், சௌந்தர்யம் தோய்ந்த கருங் கண்களும், விற்புருவமும், வாள் நுதலும், அளவான கை கால்களும், ஒரு நாட்டியக்காரிக்கு இருக்க வேண்டும். இத்தகைய வனப்புடையவளே நாட்டியத்திற்கு ஏற்றவள். இவளின் மூச்சிலும் நாம்

அழகை ரஸிக்கலாம்.

நல்ல கட்டுவாய்ந்த உடலும், (கடுத்தரமாக இருக்க வேண்டும்) கமலக்கண்களும், விரிந்தமார்பும், பருத்த தோள்களும்; சிறுத்த இடையும், நகை நடனமிடும் அதரங்களும் ஒரு நாட்டியக்காரனுக்கு இருக்க வேண்டும்.

* * *

இந்த அழகன்—அழகியிடமே நாட்டியக்கலை நன்ருகப் பரிமளிக்கும். ஆதலின் நாட்டியம் பயில விரும்புவோர் முதலில் தங்களை அழகர்களாக்கப் பயிலவேண்டும். தேகாரோக்கியத்தில் அழகு வாசம் செய்யும். அக அழகுக்கு தேகாரோக்கியம் இன்றியமையாதது.

* * *

நாட்டியம், ஆண்களுக்கும், பெண்களுக்கும் போதிக்கப்பட்டால் தேசம் முன்னேற்றமடைந்துவிடுமென்பதில் என்னைப் பொறுத்தவரையில் துளிகூட ஐயம் கிடையாது. நமது கலாசாலைகளில் வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு நாட்டியம் அவசியமாக போதிக்கப்படவேண்டும். இதனுல் உடற்கட்டும் உடல் வனப்பும் வாய்ந்த ஒரு சந்ததியையே சிருஷ்டிக்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த சந்ததி கலா சௌந்தர்ய முள்ளதாகவும் விளங்கும்.

* * *

மேனுடுகளில் ஏறக்குறைய எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நாட்டியக்கலை கற்பிக்கப்படுகிறது. இதன் உட்பிரிவுகளாக தேகப்பயிற்சியும், அழகுக் கலையும் கற்பிக்கப்படுகின்றன. இதனுலேயே நம் மேனுட்டுப் பையன் பெண்களும் 'கொழுகொழு' வென்று இருக்கின்றனர். அவர்களது அழகும் கண்ணையும், கருத்தையும் குட்டிச்சுவராடிக்கிறது.

* * *

நாட்டியமே தேசம் நாகரிகமடைந்துள்ளது என்பதற்கு அறிகுறி. நாட்டியக்கலை ஒரு காலத்தில் நமது நாட்டில் உச்சஸ்தானமடைந்திருந்தது. அப்போது 'ஐரோப்பா' நிர்வாணமாக திரிந்துகொண்டிருந்தது. நமது நாகரிகம் எத்திசைக்கும் எட்டியது. உலகம் இந்தியாவுக்கு வணக்கம் செய்தது.

* * *

நாட்டியம் அங்கங்களின் அழகிலே இணையும் போதே உயிர் பெறுகிறது. அழகு இல்லையேல் அதற்கு உயிரில்லை. ஆக, அழகு நாட்டியத்திற்கு எவ்வளவு அவசியமென்று விஸ்தரிக்கவேண்டியதில்லை.

நாட்டியத்தின் பாஷைக்[...]
இசை என்று முதல் இதழி[...]
இசையின் வழியே பிறப்பதுதாம்[...]
கூத்தும் பின்னலிட்டு கலக்கும[...]
நம்மை ஆட்கொண்டுவிடுகிறது.
பாட்டுமட்டும் போதாது. தனி இ[...]
வேண்டும். இதற்கே சிலம்புகள்[...]
என. சிலம்பொலியும், பாட்டும் நாட்டியத[...]
பிக்கின்றன. ஓசையை சிலம்பு மூலமாக[...]
பாதங்களை அதற்கேற்றபடி அசைக்கவேண்டு[...]
ஒரு தனிக்கலை. கிண்கிணென்ற சிலம்பொ[...]
கின்னரர் கானத்துடன் விளங்கும் பாட்டு இ[...]
போது, நாட்டியம், ஊர்வசியை மனக்கண்மு[...]
நிறுத்திவிடும்.

இதனுல் நாட்டியமாடுபவர்கள் உடல்கட்டு வ[...]
தவளாய் அழகு நிறைந்தவர்களாய், பாட்டிலும் இசையிலும் பண்பட்டவர்களாய் இருக்கவேண்டும்.

நாட்டியக் கலையினுல், கலை அழகு உள்ள ஒரு தனி மனிதஜாதியையே சிருஷ்டிக்கலாம்.

(17-ம் பக்கம் தொடர்ச்சி)

களோ, அதைப் பொறுத்துதான் இருக்கிறது உங்கள் விதையின் விளைவும். நல்ல தினமாகத் தேர்ந்தெடுத்து விதையைப் போடுங்கள். கைமேல் பலன் கிடைக்கும். காரணமென்ன? சந்திரன் சக்தி.

இது பற்றித்தான் வளர்பிறையில் எந்தக் காரியத்தையும் செய்யும்படி நமக்கு பெரியோர்கள் கட்டளையிட்டுச் சென்றனர். ஆனுல் சந்திர வெளிச்சத்தால் இந்தக் காரியங்களெல்லாம் நடப்பதாக நினைப்பது தவறு. மண்ணின் ஈரத்தின்மீது சந்திரனின் செழிப்புச் சக்தி பாய்ந்து வேலை செய்கிறதே ஒழிய மற்றப்படி வேறில்லை. மண்ணில் ஈரமில்லாவிட்டால் பௌர்ணமியில் விதைத்தாலும் பயன் தராது.

பௌர்ணமி தினத்தன்று கடல்கள் பொங்குகின்றன. உடல்களை சந்திர வெளிச்சம் பிழிந்தெடுத்த பழங்கள் போலாக்கி விடும். சந்திரன் உள்ளத்திற்கு ஒரு வெறியை யூட்டும்,......இது மாதிரி இன்னும் எவ்வளவோ இருக்கின்றன சந்திரனின் அற்புதங்கள். சொல்லிக் கொண்டு போகலாமென்ருல் இடமெது?

"உங்களுக்கு பெரியம்மை கண்டிருக்கிறது"

ஓ! ஹோ!...... (தனது மனைவியைப் பார்த்து)

'கமலா'......அந்த கடன்காரப் பையல்கள் வந்தால் கடைசியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒரு 'சாமான்' இருப்பதாகச் சொல்லிவிடு!

...நடிப்புக்கலையின் சிகரம்!

...முகத்திலுள்ள ஊழல்களை ...ந்தரித்து காட்டி, மக்களுக்கு உண்மை அறிவூட்டி, தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான சமூக சீர்திருத்தம் அளிக்கும்

புகழ்பெற்ற நாவலாசிரியர்:
J. R. ரங்கராஜுவின்
இணையற்ற சமூக சீர்
திருத்த துப்பறியும்
தமிழ் நாவல்.

சந்திர காந்தா

ஏராளமான பொருட் செலவில் பொருக்கி எடுத்த சிறந்த நடிகர்களைக்கொண்டு தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்ட வரும் பேசும்படமாய் தயாராகிறது.

ஸ்டுடியோ
சரஸ்வதி சினிடோன், பூனா.

ஸீனேரியா & டைரெக்ஷன்
P. K. ராஜா சாண்டோ

ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்,
திருப்பூர்.

எறும்பா? — மன[illegible]

[ஸ்ரீ. ஏ. டி. பாலசுப்பிரமணியம்]

மனிதன் தனது மனச் சாட்சியை ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு பக்கத்து வீட்டுக்காரனை எப்படி நசுக்கிப் போடுவது என்று யோசித்தவண்ணமாயிருக்கிறான். ஆனால் அதே சமயம் கவனிக்கப்படாத சிறு ஜீவராசிகளின் உலகம் அவனுக்கு எதிராக படை திரட்டி வருகின்றது.

உலகம் யுத்தமயமாகிவிடும்போது, எல்லா உயிருள்ள வஸ்துக்களும் அமர்க்களத்திலிறக்கும்போது அப்போது ஏற்படும் பயங்கரங்களினால், மனிதன் பூமியினின்றே மறைந்துவிடுவான் என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவன் மறைந்தும் போகலாம். ஆனால் இன்று அவனுக்கு எவை மிகவும் அற்பமானவைகளாகத் தோன்றுகின்றனவோ, எவைத் தனது கண்களில் படுவதற்கே யோக்யதையற்றவை என்று கருதப்படுகின்றனவோ, அவை நாளைக்கு அவனை வெற்றிபெற்றுவிடலாம் என்பதும் சாத்தியமான காரியம்தான்.

தனது குகையில் முதல் மனிதன் பதுங்கிக் கிடக்கும் முன்பே மண்மீது பெரிதும் நிலை நாட்டப்பட்ட சமுதாயங்கள் இருந்தன. இவைகளுக்கு நகரங்களும் இருந்தன. சமுதாய விதிகளும், கட்டுப்பாடுகளும் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக 'தீயில் குதி' என்று தளகர்த்தன் கூறினால், மறுபேச்சின்றி குதித்துஉயிரை அர்ப்பணமாக்கும் போர்வீரர்கள் கொண்ட படையும் இருந்தது. அந்த பாறை விடுதியில் இருந்த முதல் மனிதன் ஒருவேளை இந்த ஜாதியினர்களில் சிலரை தனது பாதங்களின் கீழ் பார்த்திருக்கலாம். இந்த ஜாதியினர்களே எறும்பினங்கள்.—சுருசுருப்புள்ள எறும்பு வர்க்கம். இவைகளைப்பற்றி அவனது சாதாரண மூளை கொஞ்சம்கூட சிந்திக்கவில்லை. உண்மை என்ன? மனிதனது சக்ராதிபத்தியத்தைத் தகர்த்து எறியும் சக்திகளில்இவைகளும் சேர்ந்தவை. தவிரவும் இவைகளே மனிதனுக்கு பேராபத்தை விளைவிக்கக் கூடியவை.

இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் ஒரு பெரிய கைத்தொழில் இருந்தது. அங்கு இருந்த பூமியில் பருத்தி எவ்வளவோ செழிப்பாக வளர்ந்தது. தோட்டக்காரர்களுக்கும்,நூற்போர்களுக்கும், அது பணத்தைக் கொண்டுவந்து குவித்தது. இன்று அந்தக் கைத்தொழில் அ[illegible]றது.

மனிதனை பூச்சி பூரா வெற்றிகொண்டுவ[illegible] பதற்கு இந்த உதாரணம் போதாதா? சொ[illegible] யாதவேகத்தில் பெரிய கரையான் எறும்[illegible] திக்கழனிகளை அப்படியே கபளீகரம் செ[illegible] டன. இந்த எதிரிகளை முறியடிக்க விஞ்ஞான[illegible] ஆயுதங்களையெல்லாம் பிரயோகித்தும் அ[illegible] அசைக்க முடியவில்லை.

கொள்ளையடிக்கும் இந்த பூச்சி உலகத்தை [illegible] தப்போட உழைத்து வரும் புரொபஸர் லெப்[illegible] இன்னும் பத்து வருஷங்களுக்குள் பருத்திபேல் ஒன்றுகூட இருக்காதென்று கூறுகிறார். இந்த கரையான் எறும்புகளால் 7,000,0000,000 பேல்கள் பருத்தி இதுவரையில் மாயமாய் மறைந்து விட்டிருக்கிறது.

எகிப்திலும், இன்னும் ஆப்ரிக்காவின் மற்ற பகுதிகளிலும் உள்ள குடியானவன் எவ்வளவோ கேடுகளைக் கண்டிருக்கிறான். ஆனால் ஒன்றுக்கு பயப்படுவதுபோல் அவன் வேறெதற்கும் அஞ்சுவதில்லை. நன்றாக வெய்யில் காய்ந்துகொண்டிருக்கும். நீல வானத்தில் 'மாசு மரு' விருக்காது. ஆனால் திடீரென்று வானம் இருண்டுவிடும். ஆகாயமும் வானமும் சந்திப்பதுபோல் காணப்படும் இடத்திலிருந்து நீண்ட 'மேகங்கள்' கிளம்பும். ஒரு மணி நேரத்திற்கெல்லாம் வானம் பூராவும் இருண்டு விடும்; கோடிக்கணக்கான தத்துக்கிளிகள் பறக்கும். மாலைப்போது முடிவதற்குள் பச்சையாக இருந்த நிலங்கள் கட்டாந்தரையாகிவிடும். குடியானவன் இதைப் பார்த்து எப்படி குலை நடுங்காதிருக்க முடியும்?

இங்கிலாந்துக்கு நாம் இங்கிருந்து விமானத்தில் பறந்து செல்லலாம்; எண்பது மைல்களுக்குப் பீரங்கிகளைச் சுடலாம். இங்கிருந்து அமெரிக்காவிற்கு ஒலியை காற்றில் அனுப்பலாம். பெரிய கணக்குகளை அரைநொடியில் போடலாம். ஆனால் இந்தப் பூச்சி உலகத்தோடு போரிடுவதென்பது சற்றும் முடியாத விஷயம்.

எறும்பில் வெள்ளை எறும்பு மிகவும் பயங்கரமான வழக்கங்களையுடையது. தோற்றமோ சிறிது; உட

. பச்சைக் குழந்தையின் பாதம் ...றுவிடும். ஆனல் அதன் பராக் ...முடியாதது. ஏனெனில் அது ...பெரிய கோபுரங்களை அமைத்துக் ... ஆனல் பீரங்கிகள்கூட இவைகளை ...க்க முடியா.

...எறும்பின் இருண்ட கோபுரத்தில் எப் ...ஒரே இரவுதான். எப்போதும் வேலை நடந்து ...யிருக்கும். நிரந்தரமான ஒழுங்கு நிலவும். ... இரும்பு நாகரிக ஜாதி. இன்பமே கிடை... மனிதனது மூளை இந்த ஜாதியினது ஒப் ...சலிப்பில்லா, இன்பமில்லா வேலைக்கு அர்த் ...முடியாது.

...ள்ளை எறும்புக்கு ஆகாரம் தேவையானல்; ...து ஒரு நவீன சுரங்க எஞ்ஜினியரைப்போல வேலை செய்ய ஆரம்பித்துவிடுகிறது. கோபுரத்திலிருந்து பாதாளம் வரையில் சுரங்கங்கள் தோண்டப்படுகின்றன. பார்ப்பவர்களுக்கு வெளியில் ஒன்றும் தெரியாது. உள்ளேயே அபாரமான வேலை.

வெள்ளை எறும்புகள் எதை வேண்டுமானலும் சாப்பிடும். விசேஷமாக அவைகளுக்கு மரத்தின் மேல்தான் பிரியம் அதிகம். சேமித்து வைக்கப்படும் ஆகாரங்கள், காலியாகிவிட்டால், அவைகள் வெளிக்கிளம்பிவிடும்.

மாலைநேரம். ஏழைக் குடியானவனே தளர்ந்த உள்ளத்தினனய் தனது குடிசைக்கு வந்து சேருகிறன். குடிசை மூங்கில்மீது 'அப்பாடா' வென்று சாய்கிறன். 'மளால்' என்று முறிகிறது மூங்கில். மணை மீது உட்காருகிறன். தூளாய்விடுகிறது அது. அங்கிருக்கும் கைத்தடியை எடுக்கிறன். தடி பொடிப்பொடியாக உதிர்வதைக் கண்டு திகைக்கிறன். காலையில் அவன் கழனிக்காட்டுக்குப் போகும்போது அவைகள் நன்றாய்த்தானே இருந்தன. ஆமாம் பகல்பூராவும் அந்த சாமான்களில் பத்துலக்ஷம் வெள்ளை எறும்புகள் சுரங்கம் வைத்து அவைகளின் மேல் பாகத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் களவாடிச் சென்றுவிட்டன.

இத்தகைய விரோதியுடன் மனிதன் எப்படிப் போராட முடியும்? செல் எறும்பும் இதேமாதிரிதான். அர்ஜண்டினவில் ஹுன் என்றம்பு என்றொரு ஜாதியிருக்கிறது. இது எவ்வளவு 'சாது'வானது என்பதற்கு ஒரு உதாரணம். ஒரு நாள் ஒரு தாய் தனது குழந்தையை பாய்மீது படுக்க வைத்துவிட்டு வெளியேசென்றுள். குழந்தையோ தூங்கிக்கொண்டிருந்தது. நான்கு மணி நேரம் கழித்து அவள் திரும்பி வந்தபோது அங்கு குழந்தையின் எலும்புக்கூடுமட்டும்தான் கிடந்தது. இதைவிட 'சாது'க்குணத்தை வேறு எதனிடம் காணமுடியும்?

மேடீரியா தீவில் பட்சிகளே இல்லாதிருப்பதற்குக் காரணமென்ன? ஆம்! ஒரு காலத்தில் அங்கு ஏராளமான பட்சிகள் வாசம் செய்தன. ஆனல் எப்படியோ ஹுன் எறும்பு அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தைக் கடந்து அந்த தீவில்வந்து குடியேறிவிட்டது. அதற்கோ மாமிசத்தின்மீது விருப்பம். பட்சிகளுக்கும் குறைவில்லை. அடியோடு பட்சி ஜாதியையே இந்த எறும்புகள் பைசல் செய்துவிட்டன.

எறும்புகளைக்கண்டு நடுங்க மனிதனுக்கு காரணங்களில்லாமலில்லை. காடுகளில் சென்று நோக்கினல், பின்வரும் உண்மை புலனகும். ஒரு எறும்பு வாசஸ்தலத்திருந்து 5 மைல்கள் தூரத்திலிருக்கும் மற்றொரு எறும்பு வாசஸ்தலத்திற்கு எறும்புகள் சாரை சாரையாக பல கிளைகளாகப் பிரிந்து சென்றுகொண்டிருக்கின்றன. முன்னணியில் போகும் எறும்புகள் கொஞ்சம் பெரிதானவைகளாயிருக்கின்றன. இப்படி இவ்வளவு மைல்கள் நடந்து செல்லும் இந்தப் படைகள், எல்லாப் பக்கங்களிலும் அந்த மற்றொரு எறும்பு வாசஸ்தலத்தைச் சூழ்ந்து கொள்கின்றன. அங்கிருந்து அந்த எறும்புகள் புதை புதையாகக் கிளம்புகின்றன. இருதரப்பு எறும்புகளுக்கும் யுத்தம் நிகழ்கிறது. லக்ஷக் கணக்கான எறும்புகள் பிணமாகின்றன.

இது இயற்கையால் வரும் உணர்ச்சியா? அல்லது முன்னதாக திட்டமிடப்பட்ட யுத்தமா? யுத்தவீரர்களைப்போல் அவைகள் அணிவகுத்துச் செல்வதை மனிதன் கவனித்தால் அவன் கதி கலங்குமென்பதில் சந்தேகமில்லை. மனிதனுக்கு அவைகள் எதில் தாழ்ந்திருக்கின்றன?

பூச்சி உலகத்தில் தீவிரமான காரியங்கள் நிகழ்கின்றனவென்றே தெரிகிறது. மனிதனுக்கு எதிராக அவைகள் பல வேலைகளைச் செய்துவருகின்றன. சரித்திரத்திரத்தில் யுத்தங்களால் கோடிக் கணக்கான பேர்கள் கொல்லப்பட்டுப்போனதாக காணக்கிடக்கிறது ஆனல் இந்த பூச்சிகளால் எவ்வளவு மனிதர்கள் கொலை செய்யப்பட்டார்கள்? சரித்திரம் கணக்குக் கூற முடியாமல் திகைக்கிறது.

'பிளி' பூச்சிகள் இந்தியாவில் சர்வ சாதாரணம். இதனல் 7,000,000 மரணங்கள் ஏற்பட்டனவென்று

லெப்ராய் சொல்கிறார். ஆனெனில் இவைகளே பிளேக்குக் காரணமானவை.

இந்த சிறிய விரோதிகளுக்கு எதிராக மனிதன் நடத்தும் முடிவில்லாத சண்டையில் அவன் பல அசைக்கவும் முடியாத ஆயுதங்களைச் சிருஷ்டிக்கிறான். எதையும் 'சைனேட்' கொன்றுபோட்டுவிடும். ஆனால் அந்த சிறிய உயிரிடம் கஷ்டப்படாது எப்படி 'சைனேட்'டை உபயோகிப்பது என்பதுதான் பிரச்சினை.

யுத்த சரித்திரத்திலேயே மஹா யுத்தத்தில்தான் பூச்சிகளால் இறந்த போர்வீரர்கள் குறைவு. இதற்கு முன் நடைபெற்ற யுத்தங்களில் எதிரிகள் ஆயுதங்களால் தாக்குண்டு இறந்ததைக் காட்டிலும் பூச்சிகளாலேயே அதிகம்பேர் வானை எட்டிப் பார்த்தார்கள்.

தெரியும் பூச்சிகள் உலகம் ஒருபுறமிருக்க, மனிதன் கண்ணுக்கும் தெரியாது பூதக் கண்ணாடிக்கும் தப்பித்துக்கொள்ளும் பூச்சிகள் உலகத்தை நினைத்தால் மனிதனுக்கு தூக்கம் வருமாவென்பது சந்தேகமே. அவைகளுடன் நாம் எப்படி போராடுவது. 1918-ல் திடீரென்று காரணமின்றி, முன்பின்

தெரியாத ஒரு சாவுத் தேவன்
செலுத்தினான். இன்புளூயன்ஸ
கொண்டு போகிறது என்று
நடந்து பதினேழு வருஷங்க
வருஷ ஆராய்ச்சி நடத்தியும், 'இன்
மனிதன் அழைக்கும் கிருமியை கா
இன்றும் இந்தியாவில் விந்திய மலை
மலைகள் காணப்படுகின்றன. பிரம்மா
கள், அங்கு மறுநாளைக்கு மண்ணாக மாறுவல
லாம். கடித்ததும் மனிதன் துடிதுடித்து
போகும் ஓர்விதமான செவ்வெறும்புகளு
பின் காடுகளில் உயிர் வாழ்கின்றன. இ
பார்க்கும்போது முடிவில் வெற்றி யாருடை
இருக்குமென்று முன்னதாகவே கூற யார்
பெடுத்துக்கொள்ள முடியும். இவை ம
வென்று, அவனை அடியோடு பஸ்மம் செய்துவ
உலகத்துக்கு மீண்டும் எஜமானர்களாக வாழ்வதற
கும் இடமிருக்கிறது.

யார் வெற்றி பெறுவார்கள்? மனிதனா? எறும்பா?

உள்ளங் கவரும் செய்தி!

தி மெட்ராஸ் பிலிம்ஸ் லிமிடெட்

புராணங்களுள் சிறந்த ஓர் கதை மகோன்னதமானது, உள்ளம் கவர்வது.
சென்னையில் ஒரு பிரபல ஸ்டுடியோவில் தயாராகிறது.

-:: மானஸா தேவி ::-

வீணை வெங்கடாத்திரி பாகவதர்-சமஸ்தான வித்வான்
ரங்கசாமி பாகவதர்-திருவனந்தபுரம் அரண்மனை
சங்கீத ஆசிரியர் முதலியோர்.

பக்தி, திகைப்பு, மனோ எழுச்சி, காதல், ஹாஸ்யம்
முதலியன ஒருங்கே திகழ்வது

விவரங்களுக்கு:

தி மெட்ராஸ் பிலிம்ஸ் லிமிடெட்

336, தம்பு செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

...டு சோல் ஏஜெண்டுகள்

...சோல் ஏஜெண்டு:

...க்துசாமி செட்டியார் அவர்கள்,
...நேஷனல் நியூஸ் மார்ட்,
...வில் வீதி, கும்பெனித் தெரு,
கொழும்பு.

...மா சோல் ஏஜெண்டு:

...மெஸர்ஸ். ஜெனரல் நியூஸ் ஏஜன்ஸி,
244, பியாரி தெரு, ரங்கூன்.

...ாய்நாட்டு சோல் ஏஜெண்டு.

திரு. P. சிவகுரு அவர்கள்.
...0, பிரிக்பீல்ட் ரோடு, கோலாலம்பூர்.

பினங்கு சோல் ஏஜெண்டு.

நவீன கதாவாசக புத்தகசாலை,
40 A, சோலியா தெரு, பினங்கு,

"சந்திரோதயம்"

மாதமிருமுறை வெளிவரும்
சிறந்த தமிழ்ப் பத்திரிக்கை

விளம்பர விகிதம்

தடவை ஒன்றுக்கு

கடைசீ பக்கம் மேல் அட்டை (இரண்டு கலர்களில்)	40	0	0
உள் அட்டை பக்கம்	30	0	0
சாதாரண பக்கம்	20	0	0
,, ½ பக்கம்	11	0	0

அரை பக்கத்திற்குக் குறைந்து விளம்பரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மற்ற விபரங்களுக்கு எழுதுக,
மானேஜர்:
"சந்திரோதயம்"
வண்ணாரப்பேட்டை, சென்னை.

எதிர் பாருங்கள்! எதிர் பாருங்கள்!!

ஸ்ரீ ராஜம் டாக்கீஸ், மதராஸ்

தயாரித்துக் கொண்டு வருகிற

மிஸ். கமலா

சினிமாராணி டி. பி. ராஜலக்ஷ்மி நடிக்கும்
அதி உன்னத சமூகப் படம்

மிஸ் கமலா

கல்கத்தா பயோனீர் ஸ்டுடியோவில் பால் ப்ரிக்கட்
ஆர்தர் ப்ராட்பர்ன் அவர்களின் ஆதரவில எடுக்கப்படுகிற

மிஸ். கமலா

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராஜம் டாக்கீஸ்
நெ. 70, சக்ரபிர் ரோடு, நார்த் எல்ஜின் போஸ்ட், கல்கத்தா.

Edited and Published by N. VIJAYAKUMAR, 329, T. H. Road, Washermenpet, Madras.
Printed at the SRI AUDIMULAM PRESS, 20, Perumal Kovil Garden Street, G. T. Madras.

பட முதலாளிகளே !

பம்பாய், கல்கத்த
இடங்களில் பிளாக்
காலத்தையும் பணத்
ஏன் விரையம் செய்கிற

?

M. C. A.

(ESTD. 1890.)

உங்களிஷ்டப்படி:—

கலர் பிளாக்குகள், ஆப்டோன் பிளாக்குகள்,

லைன் பிளாக்குகள், கலர் ஸ்லைடுகள்

முதலியன

குறித்த காலத்தில்
குறைந்த சார்ஜில்

சிறந்த முறையில்
செய்து கொடுக்குமிடம்

தென்னிந்தியாவில் இது ஒன்றே

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கோ.,

ஜோன்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்

டெலிபோன் நெ. 3202

4-4-95

Regd. No. M. 3560

ள்!! விரைவில் வெளிவருகிறது!!!

சந்திரோதயம்”

எடிசன் மலர்

சினியாக் கலை யுலகம் சிரமேல் வைத்து வணங்கும் அந்த மகத்தான விஞ்ஞானி யின் திருநாளைக் கொண்டாடும் நோக்க த்துடனே இது பிரசுரிக்கப் படுகிறது.

விலை அணா 4 தான்

கண்களைக்கவரும் படங்களும் மனதிற்கு மகிழ்ச்சி தரும் கட்டுரைகளும் இந்த மலரில் ஏராளம். வீண் புகழ்ச்சி பாட நாங்கள் விரும்பவில்லை. தமிழ் நாட் டில் இதுவரையில் இம்முறையில் எந்த மலரும் வெளி வந்ததில்லை. வேண்டு வோர் முன்னதாகவே அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

பூரா விபரங்களுக்கு

“சந்திரோதயம்” ஆபீஸ்

வண்ணாரப்பேட்டை, : : சென்னை.

Wrapper Pages Printed at The Modern Printers, 98, China Bazaar, Madras.